உ

பரமபதிதுணை.

கைலாய

# சட்டை முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# மூன் ஞானம் ௱, பின்ஞானம் ௱.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பார்வையிடப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

# குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

இதன் விலை — அணா 4.

உ

கடவுள்துணை.

## கைலாய சட்டைமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# முன் ஞானம் நூறு.

அகண்டபரி பூரணமா முமையாள்பாத
மப்புரத்தே நின்றதொரு வையர்பாதம்.
புகன்றுநின்ற கணேசனொடு நாதாக்கள்பாதம்,
புகழ்பெரிய வாக்குடைய வாணிபாதம்
நிகன்றெனவே யெனையாண்ட குருவின்பாதம்
நிறைநிறையாய்ச் சொரூபத்தில் நின்றோர்பாதம்
முகன்றுயெனை யின்றெடுத்த சின்மயத்தின்பாத
மூவுலகும் மெச்சுதற்குக் காப்புத்தானே. (1)

தாங்கிநின்ற சரிதையிலே நின்றுசடம்வீழ்கில்
தப்பாது கிரிகையுள்ளே சாரப்பண்ணும்
வாங்கிநின்ற கிரிகைவிட்டு விழுந்ததானால்
மகத்தான வுடலெடுத்து யோகம்பண்ணும்
ஓங்கிநின்ற யோகம்விட்டு விழுந்ததானால்
உத்தமனே வுயர்ந்துநின்ற ஞானத்தேற்றும்
பாங்கினின்ற அச்சென்ம மவுனமுத்திப்
பரிவாக வாய்த்தவர்க ளறிந்துகொள்ளே. (2)

அறிந்திந்த நான்குக்கும் விக்கினங்களுண்டு
அப்பனே ஆகாமியஞ்சஞ் சிதத்தினோடே
மறிந்துநின்ற பிராரத்தந் தோயத்தோடு
மகத்தான நாலுக்கும் விக்கினங்களாச்சு
பிறிந்துநின்ற நாலினாற் செய்வதென்ன
பேரான வறுமையொடு கிலேசந்துக்கஞ்
செறிந்துநின்ற பெண்பொன்னா மண்ணினாலே
சேத்துமத்தி லீப்போலே தியங்குவாரே. (3)

தியங்கினல் கொர்ச்சித்துத் தூரத்திச்சண்ணுஞ்
சீரறியா மிலேச்சரையோ ஜகத்தினுள்ளே
மயங்கினர் நாலுபா தத்தினுள்ளு
மனஞ்செவ்வை யாவதெப்போ நாமறிவதெப்போ
தயங்கின ருலகத்திற் கோடிபேர்கள்
சாவதுவும் பிறப்பதுவுங் காவடிபோலாச்சு
துயங்கினர் துயரத்தால் ஞானம்போச்சு
சுடுகாட்டி லறிவதுபோல் சுத்தப்பாழே. (4)

பாழான மாய்கைசென்றே யொழிவதெப்போ
பரந்தமனஞ் செவ்வையாய் வருவதெப்போ
வாளான விழியுடைய பெண்ணைச்சேரு
மயக்கமற்று நிற்பதெப்போ மனமேயையோ
காழான வுலகமதி னாசையெல்லாங்
கருவறுத்து நிற்பதெப்போ கருதிநின்ற
கோளான கருவிவிட்டு மேலேநோக்கிக்
கூடுவது மேதென்றால் மூலம்பாரே. (5)

மூலமுத லாறுதலங் கிழேதள்ளி
முதிர்ந்துநின்ற மேலாறு மெடுத்துநோக்கிக்
கோலமுட னுன்மனையைத் தாண்டியேறிக்
கொடியதொரு ஞானசத்திக் குள்ளேமைந்த
பாலமென்ற கேசரியா மவுனத்தூண்டிப்
பராபரமா மந்தரத்தில் ஞானமுற்றிக்
காலமொடு பிறப்பிறப்புங் கடந்துபோகுங்
கைவிட்ட சூத்திரம்போல் கடமுமோங்கே. (6)

ஓங்கார முதற்கொண்டு வைந் தெழுத்தோடாறு
முற்றுநின்ற பஞ்சகர்த்தா விருந்திடந்தான்பாரு
ஆங்கார மாணவமும் நானெனவும்போனு
லப்பவல்லோ அகாரமுத லுகாரங்களும்
பாங்கான மகாரமொடு விந்துநாதம்
பரவியதின் மேல்நிற்கும் பராபரந்தான்மைந்தா
வாங்கான மவுனத்தைப் பற்றிபேறு
மருவிநின்ற லகிரியைத்தா னெத்துக்காணே. (7)

ஒத்துநின்ற ஓங்கார மண்ணையுண்ணு
        மூலவியந்த மண்சென்று சலத்தையுண்ணும்
மத்திநின்ற சலமதுதான் றீயையுண்ணும்
        பாங்கான தீச்சென்று காலையுண்ணும்
வெத்திநின்ற கால்சென்று விண்ணையுண்ணும்
        விழுந்ததப்பா சடமென்று வேதாந்தம்போச்சு
முத்திகண்டு கூடுவது மெந்தக்காலம்
        மூடரே மதுவையுண்டு மேலேபாரே. (8)

பாரப்பாஅகாரமுக லுகாரத்தைக் கொள்ளும்
        பாங்கான உகாரமது மகாரத்தைக் கொள்ளும்
நேரப்பா மகாரமது விந்துவைத்தான்கொள்ளும்
        நேரான விந்துவது நாதத்தைச்கொள்ளும்
சேரப்பா நாதமுற்று சத்தியைத்தான்கொள்ளும்
        சேர்ந்துநின்ற சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்
ஆரப்பா சிவந்தன்னைப் பரந்தான்கொள்ளும்
        அப்பரத்தைக் கொண்டவிட மறிந்துவுன்னே. (9)

உன்னிநின்று மூலமுத லாறும்பார்த்து
        வுறுகின்ற சுழிமுனையை யறிந்துபின்பு
மன்னிநின்ற மதிமேலே சாம்பவியைக்கண்டு
        மருவிநின்று மனமுறைந்து தேர்ந்தபின்பு.
பன்னிநின்ற விவ்வளவும் யோகமார்க்கம்
        பகலிரவு மற்றவிடம் ஞானமார்க்கம்!
கன்னிநின்ற விடங்கண்டா லவனேஞானி
        காட்டுவாள் கேசரியைக் காட்டுவாளே. (10)

காட்டுவாள் கிரியுன்னை மேலேயேற்றிக்
        கைவிட்டால் கிரியைத்தான் கீழேதள்வள்
மூட்டுவாள் குளிகைவிட்டால் க்ஷணத்துக்குள்ளே
        மூதண்ட புவிகடந்து வெளியுங்காணும்
ஆட்டுவா ளண்டரண்ட மாலைபூண்டா
        ளாதிவஸ்து ளனுதிவஸ்தி ரண்டுமொன்று
ஊட்டுவாள் நிர்க்குணத்தி னமுதமள்ளி
        யுயர்ந்துநின்ற ஞானசத்தி யுறவுதானே. (11)

உறவென்னத் தாயைவிட வுறவுமுண்டோ
வுலுத்தரையோ வாமத்தைத் தூஷிப்பார்கள்
குறைவென்ன திரோதாயி சமையந்தோறுங்
கூடியல்லோ மாயவலை கூட்டியாட்டி
மறைவென்ன ஞானமென்ன மயக்கித்தள்ளி
மகத்தான சமுசார வலையிற்போட்டாள்
நிறைவென்ன வாமத்தால் ஞானமாச்சு
நின்றவனே சிவயோகி வாசிபாரே. (12)

வாசியென்றும் மவுனமென்று மிரண்டும்வித்தை
மகத்தான சாம்பவியுங் கேசரியும்ரண்டு
தேசியென்றால் யோகத்துக் காதிவித்தை
திறமான மவுனமென்றால் ஞானவித்தை
மாசியென்ற மனமுடைத்தா லிரண்டுமோகா
மருவிநின்று அறிவறிந்தா லிரண்டுமாகும்
தூசியென்ற வெளியல்லோ அண்டவீதி
சொக்காம லகிரிகொண்டு ஆக்கியேறே. (13)

ஆக்கிநின்ற பரிசத்தாற் கொசுவிறந்ததையா
ஆச்சரியம் ரூபத்தால் வண்டிறந்ததையா
பாக்கிநின்ற மணியொலியாய் மானிறந்ததையா
பாழான வுரிசையினால் மீனிறந்ததையா
தாக்கிநின்ற கேந்தியினா லெறும்புசென்று
சாதகமாய் மாண்டதிந்த வைந்தும்பாரு
பாக்கிநின்ற விந்திரிய விடையத்துள்ளே
பாழான மனஞ்சிக்கிப் படுகுவாரே. (14)

வாரான வுலகத்தில் மனுஷர்கோடி
மருவிநின்று வுண்டுடுத்து சையோத்தில்
தாரான ஜெகதுரங்க பரங்கமேறிச்
சகலரத்ன பூஷணங்கள் தரித்துவிம்பி
மாரான வாழ்வடைந்தோ ரிறந்தாரையா
மாண்டவர்கள் வெகுகோடி மாயவாட்கைக்
கூரான சிவயோக ஞானம்வந்தால்
கூடழிந்து போகாது கூடுகூடே. (15)

கூடுவது அம்பரமோ கேசரமோவென்னில்
கூர்மையுள்ள வானமோ வதிதமோவென்னில்
ஆடுவது ஆச்சரிய நின்மலமோவென்னி
லருமையுள்ள நிர்க்குணமோ நிரஞ்சனமோவென்னிவ்
பாடுவது பதங்கடந்த பூரணமோவென்னில்
பகலிரவு மற்றிடமோ பராபரமோவென்னி
லூடுவது வெங்கப்பா பின்னேயெங்குமல்ல
உம்மென்று லூமவெள்ள மோகங்காணே. (16)

மோகமென்ற வுரலுக்குள் மனந்தான்சிக்கி
முசியாம லிடிப்பதற்கு வைம்பொரியங்கோல்தான்
பாகமென்ற கோபம்வந்து வுருவாம்நின்று
பதையாமற் சண்ணிச்சு வுலகமெல்லாந்
தாகமென்ற ஞானம்வந்து மென்னசெய்யுஞ்
சண்டாள விந்திரியச் சார்பினாலே
வேகமென்ற மனமுடைத்தோர் லகிரிகொண்டு
விண்ணுக்கு ளேறிநிற்க வெளியாய்ப்போமே. (17)

வெளியேது வெளிக்குள்ளே யொளியங்கேது
வேதாந்த வொளிகடந்த வொளியங்கேது
அளியேது அளிகடந்த வகண்டமேது
அப்புறத்தே தோற்றுகிற சோதியேது
நெளியேது நினைவேது நிர்க்குணந்தானேது
நேரான பூரணத்தின் நாதமேது
வளியேது சுழிபடக்குஞ் சூட்சமேது
தோற்றுமப்பா வானத்தை யொத்துப்பாரே. (18)

ஒத்துநின்ற சரிதையொடு கிரிகைரண்டு
முறவாதி செய்தவப்பா நன்றாய்க்கேளு
பத்திநின்ற யோகமுதல் ஞானம்ரெண்டும்
பாங்காகச் சித்தருக்கு அடுத்தவாறு
அத்திநின்ற ஆகாமியசஞ் சிதமாம்பிராரத்வ
மாறுக்கு மடுக்குமென்றால் யோகவரையெய்தும்
முத்திநின்ற ஞானத்திற் புகுந்தோர்க்கையா
மூன்றுமில்லைப் பிரபஞ்ச முழுதும்போச்சே. (19)

போச்சென்பார் முக்காலம் பிறகேநின்று
புரிமுருக்குப் போலேறிப் புணர்ந்துகொல்லும்
ஆச்சப்பா காலமென்ன வென்றுசொல்லி
யவரவர்கள் சபஞ்செய்வா ரறிந்தமட்டும்
நீச்சப்பா அகாலவெள்ள மார்கடப்பாரென்றால்
நேரான ஞானியல்லோ கடந்துநின்றார்
மூச்சப்பா அற்றிடத்தைப் பாருபாரு
மூட்டுவிக்கு முகிடந்தான் ஞானத்தீயே. (20)

தீயுக்குள் விழுந்துநின்ற நிரணபஸ்பம்போலச்
செகச்சால முதற்கொண்டு காலங்கள்போம்
தீயுக்குள் விழுந்தெழுந்த நெய்யைப்போல
சிறப்பான ஞானமது திரண்டேபேறும்
தீயுக்குள் காஷ்டமொடு கோலுங்கூடித்
திரண்டாப்போற் கருவியெல்லாம் க்ஷணத்தில்மாளும்
தீயுக்குள் பராபரந்தா னிருந்ததும்பார்
ஜெகமெல்லாம் வித்தையென்று தெளிந்துபோமே. (21)

தெளிந்தவிடங் கண்டவரார் சித்தர்யோகி
ஜெகமெல்லாம் நானென்பார் திருட்டுஞானம்
ஒளிந்தவிட முன்மனைத்தாய் கேசரிக்குள்நிற்பாள்
உற்றுப்பார் மகாரம்வைத்து ஆதலூது
அளிந்தவிடம் நிற்குணந்தா னதிலேகேளு
ஆச்சரிய மகாரமொன்று வுண்டுவுண்டு
களிந்தவிடம் நிராகார மொன்றுமில்லைக்
காட்டுவதா ரறிவுகொண்டு வுற்றுக்காணே. (22)

உற்றுநின்று வுலகத்தோர் ஞானம்பார்த்து
ஊனுக்குக் கிடையாமல் புரட்டுப்பேசி
பற்றுநின்ற மோகததாற் பெண்ணைக்கூடி
பரந்துநின்ற சிரோதாயி வலைபிற்சிக்கிக்
கொத்துநின்ற விடங்காண்பார் கண்ணைமூடிக்
கும்மென்று இருளாகுங் குறியும்பொய்யா
மற்றுகின்ற லகிரியினாற் கொண்டேயேற
மாட்டார்க ளறுசமைய மாடுதானே. (23)

சமையமெல்லாஞ் சத்தியுண்டு சிவமுமுண்டு
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளினார்கள்
சமையமெல்லாம் வேதாந்தஞ் சித்தாந்தமுண்டு
சாதகத்தைப் பாராமற் றயங்கினார்கள்
சமையமெல்லாம் நாதமுண்டு விந்துமுண்டு
தரக்காமற் கெட்டார்க ளுலகத்தோர்கள்
சமையமெல்லா மம்பரமாம் ஞானமுண்டு
தாயைவிட்ட பாவத்தால் தவறிப்போச்சே. (24)

போச்சப்பா ஆளூறும் பானத்தாலே
புத்தியுள்ளோர் பானத்தாற் கண்டாரையா
ஆச்சப்பா வாமமென்ன நிசிதமென்பார்
அதன்குணமோ திரோதாயி யனுஷ்டானந்தான்
ஓச்சப்பா நாதாக்கள் ரிஷிகள்சித்தர்
உயர்ந்தவரைக் கண்டவர்கள் பானத்தாலன்றோ
காய்ச்சமரம் பட்டதென்ன வேரற்றுப்போல்
கசடரென்ற வறுசமையங் கேட்டபாங்கே. (25)

பாங்கான குண்டலிக்குள் மூலமொன்று
பாரப்பா கண்டத்தில் மூலமொன்று
போங்கான புருவமைய மூலமொன்று
புகழான விந்துவிலே மூலமொன்று
வாங்கான சத்தியிலே மூலமொன்று
மருவிநின்ற பராபரத்தில் மூலமொன்று
தேங்காம விதையாறுங் கண்டஞானி
சேர்ந்துநின்ற மும்மூல யோகியாமே. (26)

ஆமப்பா நகாரமுதல் யகாரவரைநிற்கும்
அவ்வளவும் யோகத்தின் மூலமாச்சு
தாமப்பா அகாரமுத லுகாரந்தொட்டுச்
சாதகமாய் மகாரவரை ஞானமூலம்
ஓமப்பா நிசைநாத மவுனத்திற்காணும்
உற்றேற வுற்றேற அகண்டவீதி
காமப்பா வுண்டாக்கால் யோகசித்திக்
கடுங்கானற் பாலுண்ண ஞானமாச்சே. (27)

ஆச்சிந்த வரிசைவிட்டு உலகஆசான்
 ஆதியொன்று அந்தமொன்று ரவிமதிதானென்பான்
மூச்சற்ற விடங்காட்டத் தெரியாதேநின்று
 முன்னேது பின்னேது சாங்கமென்பான்
வாச்சிந்த மயக்கத்தா லுலகத்தோர்கெட்டார்
 மதுவைவிட்டு ஏறியல்லோ சமையத்தோர்கேட்டார்
ஓச்சிந்த விதமறிந்தோன் யோகஞானி
 உம்மென்றூ கும்மென்ற நாதமாமே. (28)

நாதமப்பா யோகத்தி லேந்துநாதம்
 நலமான மவுனத்தி லேந்துநாதம்
வேதமப்பா கடந்திடத்தே சுத்தநாதம்
 வெட்டவெளிக் குள்ளேயோர் நாதமுண்டு
போதமப்பா கடந்திடத்தே யந்தநாதம்
 புகழாகச் சேவித்து நிற்குநாளுங்
காதமப்பா தூரமல்ல அந்தோ அந்தோ
 கண்ணிமைக்குள் விண்ணுக்குள் கலந்துகாணே. (29)

விண்ணேது வெளியேது வொளியங்கேது
 விரைந்திந்த மூன்றுங்கே சரிதானுச்சு
கண்ணேது காதேது மூக்கங்கேது
 கண்டிப்பாய்க் கண்டதெல்லா மழிந்துபோச்சு
நூண்ணேதி ரண்டேது சமரசந்தா
 னுற்றுப்பார் வெட்டவெளி யொன்றுமில்லை
எண்ணேது நினைவேது அறிவங்கேது
 ஏகமாய்க் கலந்தமுத்தி யிடத்தைக்காணே. (30)

உத்திகொண்டு ஞானநூல் பார்த்துப்பார்த்து
 உலகத்தோர் ஞானமெல்லாம் வந்ததென்று
பத்திகொண்டு அலைவார்கள் விண்ணைப்பாரார்
 பாழான மனதையங்கே நிறுத்தமாட்டார்
முத்திகண்ட விடமெங்கே யென்றுகாணார்
 மூச்சற்று நின்றிடத்தை நோக்கிப்பாரார்
சித்திகண்டால் சித்திகொண்டு செய்யமாட்டார்
 சேர்ந்ததுவா யிருக்கறியார் திருடர்தானே. (31)

தானென்ற வாணவத்தை நீக்கமாட்டார்
சண்டாளக் கோபத்தைத் தள்ளமாட்டார்
ஊனென்ற சுகபோக மொழிக்கமாட்டார்
உற்றுநின்ற சையோகம் விடுக்கமாட்டார்
பானென்ற ஞானவெள்ள முண்ணமாட்டார்
பதறுமல் மவுனத்தே யிருக்கமாட்டார்
வானென்ற பொருளென்ன வெளிதோமைந்தா
மகத்தான மனமடங்க மெய்யுங்காணே. (32)

காணிந்த வுலகத்தில் மாயக்கூத்துங்
கண்மூக்குச் செவியோடுமிந் திரியக்கூத்தும்
பூணிந்த வாசியினல் வறுமைக்கூத்தும்
புகழான ஜெனனமொடு மரணக்கூத்தும்
ஆணிந்த வண்டமெல்லாம் படைத்தகூத்தும்
ஆங்கார மனம்புத்தி யானகூத்தும்
தோணிந்தப் படிபடைத்த பரமேயையா
சொற்பெரிய பூரணமே யென்றுகூவே. (33)

கூவையிலே யாத்தாளைத் தொழுதகூவு
குறையாத கருணையினல் திரும்பிப்பார்த்துத்
தாவையிலே மதலையைத்தான் தாய்தான்சென்று
சார்வாக வெடுத்ததுபோ லுன்னைமைந்தா
தேவையிலே யெடுத்தணைத்து உயிரைவைப்பாள்
செகச்சால மாடுகிற திருட்டுத்தாய்தான்
பாவையிலே மனஞ்சென்று பரவாவிட்டால்
பாராது போலிருப்பாள் பாருபாரே. (34)

பாரப்பா செகமனைத்து மண்டமெல்லாம்
பாங்கான குக்ஷியிலே வைத்தகன்னி
நேரப்பா யிவளைவிட்டு யோகம்பார்த்தேன்
நேராக அண்டத்தில் ஞானம்பார்த்தேன்
சேரப்பா சுத்தவிமல் மனமோபேயாம்
செகச்சாலக் கூத்தைவிட்டுத் தெளியமாட்டார்
ஆரப்பா அவளைவிட்டு ஞானங்கண்டோர்
அலைத்தழிக்கு மாசையென்ற பாம்புதானே. (35)

பாம்பதனை ஆபரணம் பூண்டவீசன்
பரிவாக மதியோடு கொன்றைசூடி
பாம்பதனை முன்னூலாய்ப் போட்டகூத்தன்
பாங்கான கரியுரித்த பாணிபாணி
பாம்பதனைக் கங்கணமாய்த் தரித்துக்கொண்டு
பரியுழுவைத் தோலுடுத்துப் பாகந்தூக்கிப்
பாம்பதனை மனைக்குமோ திரமாய்ப்போட்டுப்
பாரென்று அகண்டத்தி லாடினாரே. (36)

ஆடினதோர் கூத்தெல்லா மாத்தாள்மெச்சி
யண்டையிலே யழைத்தரனை யிருத்திக்கொண்டாள்
நாடினதோ ரவளருகி லரனுமேய்வார்
நாமறியோ மவனவளு மொன்றியொன்றி
ஊடினதோ ரிடமெங்கே பொலிதானெங்கே
பொன்றாகக் காணுகிற நடனமெங்கே
கூடினதோ ரகண்டத்தின் சோதியெங்கே
கூசாமல் மவுனத்திற் கூடிக்காணே. (37)

மெய்ஞ்ஞானதூ.

காணப்பா மகாரவரை நாதவோசை
கண்ணுக்குப் பீடமடா மவுனஞானம்
ஊணப்பா வூணப்பா நாதத்தோடு
மொருமுனையா யொருவழியா யொன்றாய்போடும்
தோணப்பா தோற்றுவதங் கொன்றுமில்லை
சுத்தவெளி ரவிகோடி சூழவன்னி
ஆணப்பா மாகோடி கண்கொள்ளாது
ஆச்சரிய மதிகமென்ற மகாரங்காணே. (38)

மகாரமன்றோ முந்திமுந்தி யாசான்சூட்டி
வழிகாட்டு முறைமையது ஞானமார்க்கம்
மகாரமன்றோ வடங்கியந்த நாதந்தாண்டி
மருவுமிட மன்றோகே சரிதான்மைந்தா
மகாரமென்ன மேலெழுந்தா மென்பார்மாந்தர்
மாட்டுவது மூன்றெழுத்தா மென்றுகாணார்
மகாரமென்ன மகாரவித்தை யதிதவித்தை
வாய்திறந்து பேசாதே மவுனமாமே. (39)

மௌனவித்தை யேதெனில்மூன் றெழுத்தேயென்பார்
மாட்டுகிற இனங்காணுர் மார்க்கங்காணுர்
மௌனவித்தை யாவதென்வாய் மூடலென்பார்
மாடுமுதற் குதிரையினு லாவதென்ன
மௌனவித்தை கேட்பார்கூட் டுறவுகாணுர்
வாய்மூட வழியோடே நாதங்கேளார்
மௌனவித்தை யாசான்தான் றூண்டிக்காட்டில்
மணிமுதலாய்த் திசைநாதங் கேட்குந்தானே. (40)

கேட்கையிலே மதியினிட வமிர்தஞ்சிந்துங்
கெடியான துவாதசமுங் கடந்துதோன்றும்
வாழ்க்கையிலே யாசையறும் நினைவும்போகும்
வாருதிபோ லண்ணுக்கி லமிர்தமோடும்
தாக்கையிலே ரவிகோடி காந்திகாணும்
சச்சிதா னந்தவொளி தானேதோன்று
மூட்கையிலே மேலமிர்த லகிரிமீறும்
மூன்றுகமும் க்ஷணமாகு மூட்டிப்பாரே. (41)

மூட்டையிலே யுலகத்துக் கிரிகொண்டுமூட்டு
முதிர்ந்தபின்பு விண்ணுக்குள் கிரிவந்துதாக்கும்
கூட்டையிலே மகாரத்தை யறிந்துகூட்டுங்
கும்மென்ற நாதத்திற் கூடியேறு
மாட்டையிலே யறிவோடு மனத்தைமாட்டு
மற்காலும் நாதத்தைக் கூர்ந்துகேளு
ஓட்டையிலே யொருவழியா யோடிற்றுனு
லுத்தமனே யச்சின்ன முத்தியையா. (42)

ஏறுகிறதுறை.

ஐயனே குருவான வகண்டமூர்த்தி
அதீதமென்ற ஞானமெல்லா மருளிச்செய்தீர்
மெய்யனே யேறுகிற சாதகத்தை
வேதாந்த லட்சியத்தை விளக்கிச்சொல்லும்
துய்யனே நிலைதோறு மெழுத்தைச்சொல்லும்
சொற்பெரிய பிராணுப குக்ஷஞ்சொல்லும்
தையனே தையமென்ற நிர்த்தஞ்சொல்லும்
சாதகமாய் லக்ஷியத்தைச் சாற்றிடீரே. (43)

சாற்றுமென்ற கேட்டமா ணுக்கனேகேள்
சந்தோஷ மானதிப்போ சார்புசொல்வேன்
ஏற்றமென்ற மூலத்தில் வாசிவைத்து
எளிதாகப் பிராணயம் பண்ணித்தேறு
ஆற்றுமென்ற குண்டலிக்குள் கடனங்கண்டு
ஆதித்தன் கொடியைப்போல் காந்திகாணும்
மாற்றுமென்ற கண்டத்தி லங்கென்றாணு
வாய்திறக்க வொட்டாது வழிசெவ்வாயே. (44)

வழியோடே நின்றுறைத்துப் பழக்கமாகி
மனோன்மணியாம் புருவமையத் தூடேசென்று
ஒளியோடே மவுனத்தை யோட்டியூது
உத்தமனே சாம்பவியைக் கண்டுகொள்வாய்
ெளிவோ போயிவ்வளவும் யோகமார்க்கம்
நின்றவனே சிவயோகி நினைவாய்க்கேளு
தெளிவோடே விந்துவென்ற குருபதத்தில்நின்று
தியக்கப்பா மவுனத்தைத் தாரையாமே. (45)

ஆமப்பா விந்துவிலே ரவிமதியோர்கூடி
ஆச்சரியங் கண்கூசி மயக்கமாகி
ஓமப்பா நாதத்திற் செவிடுபட்டு
ஊமையென்ற வெழுத்துடைய வுருவங்காணும்
தாமப்பா சத்தியிலே வன்னியோடு
சதகோடி ரவிமதிபு மொவ்வாவொவ்வா
வாமப்பா லுண்டவர்க்கித் தனையுக்காணும்
வாய்ப்பேசா ஞானிக்கு மாயந்தானே. (46)

தானென்ற சிவத்துக்குள் மௌனஞ்சென்றால்
சதகோடி நவகோடி வன்னிரவிசோமன்
பானென்ற பரத்தின்கீழ் முப்பாழுண்டு
பார்மகனே அகாரமொன்று உகாரமொன்று
வாவென்ற ம்காரமொன்று முப்பாழாக
வழங்கிற்று அதனொளியைச் சொல்லப்போகா
தேனென்ற மொழியுடைய வுன்மனாநந்தத்தை
தேவியிட பதமென்ற கேசரிதான்காணே. (47)

காணிந்தக் கேசரத்தின தாயின்காந்தி
    கண்கொள்ளா விண்கொள்ளா கரையுங்கொள்ளா
ஆணிந்தப் பரையென்பார் அம்பரந்தானென்பார்
    அவளுக்குள் மவுனமுண்டு அறிவுகொண்டுபாரு
ஊணிந்த மௌனத்தை நிஷ்களமாய்ப்போவாய்
    ஓகோகோ அம்பரத்தி லேதோவேதோ
தோணிந்தப் படியிருந்தா லயத்தினேர்மை
    சொல்லரிது அப்புறத்தே சோதிதானே. (48)

சோதியென்று பராபரத்தி லாறுவரையுண்டு
    சொல்லையிலே கேட்டிருப்போம் சொல்விக்காணும்
ஆதியென்ற மூலகுரு பேரன்மைந்தா
    ஆண்பிள்ளைச் சிங்கமென்ற கொங்கணர்தான்கேளு
வாதியென்று லவர்வாதி ஞானவாதி
    மகத்தான குளிகையிட்ட சித்தன்வாதி
பேதியென்றால் மேருப்போ லேயும்பண்ணும்
    பெருவாதி ரசவாதி பேருள்ளோனே. (49)

பேருள்ள கொங்கணர்தான் குளிகையிட்டுப்
    பேரான பூரணத்தி லாறுவரைகண்டார்
ஆருள்ளா ருலகத்தி லவரேயாசான்
    ஆச்சரியஞ் சித்தருக்குக் கீர்த்திவைத்தார்
நேருள்ள ரிஷிகளொடு முனிவரையா
    நேராகச் சமாதியிலே யிருந்துகண்டோருண்டு
தாருள்ள சலத்தேரடுஞ் சென்றாரில்லை
    சமர்த்தான மனதினிட கத்திதானே. (50)

சத்தியுள்ள வாசனையாங் குரங்குகேளு
    தண்டியல்லோ இந்திரியக் கொம்புக்குள்ளே
பத்தியுள்ளே யலைத்தடித்துப் பேய்க்கூத்தாக்கிப்
    பாங்கான மனதையல்லோ சின்னம்பண்ணி
முத்தியுள்ள வாசலுக்கு ஏறொட்டாது
    முழுமோசச் சனியனப்பா ஞானத்துக்குக்
கொத்தியுள்ள வாசனையை யடக்கிப்பார்த்தால்
    குருடனுக்கு ஞானவழி கூடுங்காணே. (51)

கூடுவது எப்படித்தான் ஞானமூர்த்தி
குரங்கைவிட்டு அகலுகிற வழியைச்சொல்லும்
நாடுவது வுலகத்தில் வாதம்வந்தால்
நன்மனது உண்டானல் சாஸ்திரத்திற்சொல்வார்
ஊடுவது சாதுசங்கம் வேதாந்தம்பார்த்தால்
உத்தமனே வாசனையாங் குரங்குபோகும்
ஆடுவது தொய்தீவா சனையிலேற்றும்
அப்படியே யுலகத்தி லனேகம்பேரே. (52)

பேரான வுலகத்தில் ஞானமுற்றும்
பேசாம லருகிருந்த விடத்தில்மைந்தா
வாரான போதத்தி லிங்கமாகும்
வாரிதிக்கு மேருவுக்கும் நடுவேகோடி
காரான காமத்தால் சுரபாண்டிலிங்கம்
கைவிட்ட சமாதியினல் சுந்தரமாலிங்கந்
தாரான மலைதோறும் பூமிதோறுஞ்
சாற்றரிது சாற்றரிது சார்ந்துபாரே. (53)

பாரப்பா சுயம்பில்வந்து பிக்ஷையேற்றல்
பலித்ததப்பா ஞானசித்தி மவுனசித்தி
நேரப்பா வொன்பதுபே ரிதிலேயோறு
நிகராகப் பெலிகொண்டுநிற்குமூவர்
காரப்பா விண்ணையென்றல் காவார்கர்த்தர்
காத்தாலே ஞானசித்தி கைகலந்துகூடும்
ஊரப்பா வாதியைப்போல் நீங்கள்கெட்ட
வுலுத்தரென்பார் சித்தர்கள்தா னுரைத்திடரே. (54)

உரைக்கவல்லோ ராஜயோகம் வைத்தாரீசன்
உண்டுடுத்துத் திரிவதற்கோ சொன்னுரையன்
மறைக்கவல்லோ வாசனையோ லகிரிகொள்ளுமென்றர்
மகத்தான தெக்ஷண மூர்த்தியாசான
நிறைக்கவல்லோ யோகமுதல் ஞானஞ்சொன்னர்
நிற்கவிட மற்றிருந்த நிர்மலமாஞ்சோதி
இறைக்கவல்லோ வூறினதோர் கேணியைப்போ
லெடுக்கெடுக்க வெழும்பிவரும் வாசனைதான்காணே. (55)

எழும்பாமல் வாசனையைக் கொன்றோன்ஞானி
யேகாமல் வாசனையை யடித்தோன்சித்தன்
எழும்பாமல் கருவிகளை யிருக்கச்சாடி
யிருத்தினவன் சிவயோகி வாதயோகி
எழும்பாம லடிப்பதற்குச் சூட்சஞ்சொல்வே
னென்மக்காள் மவுனத்தே யிருந்தாற்போகும்
எழும்பாமல் வாசனைதான் போச்சுதானல்
ஏதுமில்லை சத்தவெளி யிருளும்போச்சே. (56)

போச்சென்று இருக்கிறதோர் ஞானத்துக்குப்
புகழான வல்லமைதா னென்னமைந்தா
வாச்சென்ற அகண்டத்துள் வரைகளாறு
மருவினல் சடத்தோடே யவனேசித்தன்
நீச்சென்ற வரைபார்த்து வாரேன்மக்காள்
நில்லுங்கோள் குகையினுள்ளே யென்றுசொல்லித்
தோச்சென்ற பூரணத்திற் சொக்கிநின்ற
சுந்தரா நந்தன்வந்து தொழுதிட்டானே. (57)

தொழுதுகொண்டு பதம்பிடித்த வகண்டத்துள்ளே
சொக்குகிறோ மென்றுசொன்ன சுந்தரமேயையா
விழுதுகொண்ட ஆலைப்போல் நெட்டிட்டேறி
வெளிகடந்து ஆறுதலங் கண்டுதேறி
முழுதுங்கண் டான்பிள்ளை யென்றுகீர்த்தி
மூட்டிவைப்பேன் சித்தத்தில் கோபம்வேண்டாம்
பழுதுகொண்டு வருகிலேன் திரும்பாவிட்டால்
பராபரத்திற் சிக்கிடுவேன் பார்த்திடாயே. (58)

பாரப்பா அகண்டவெளி சுத்தக்கானல்
பார்ப்பதற்கோ அங்கொன்று மிடமேயில்லை
நேரப்பா ரவிகோடி வன்னிகோடி
நேரான மதிகோடி கண்ணேகூசும்
ஆரப்பா வளவிட்டோர் அகண்டவீதி
அதற்குள்ளே செல்லரிது மைந்தாபோபோ
காரப்பா குகையென்று பட்டங்கட்டிக்
கடுங்குளிகை சோடிட்டுக் கலந்திட்டேனே. (59)

கலந்திட்டே னொருவரையில் நாதவோசை
கண்கொள்ளா வெளிக்குள்ளே கலக்கமாச்சு
கலந்திட்டேன் மறுவரையி லிடியோகோடி
கண்கெட்டேன் மதிகெட்டேன் காதுங்கெட்டேன்
கலந்திட்டேன் மூவரையிற் காந்திக்குள்ளே
காரணமே நிர்க்குணமே கலங்கிக்கிழே
கலந்திட்டே னப்புறத்தி லேறமாட்டேன்
கடுகவந்தென் கொங்கணரை யழைத்திடீரே. (60)

அழையுமென்ற சொற்கேட்டுச் சுந்தரானந்த
ரக்ஷணத்திற் கொங்கணரை யதிசீக்ரத்தில்
விழைவுடனே யோடிவந்து தெண்டனிட்டு
விரைவுடனே கொங்கணர்தா னிக்ஷணத்தில்
அழையுமென்று ரெங்களைய ருங்களைத்தானையா
ஆச்சரியஞ் சொல்லுவதற் கடியேன்வந்தேன்
அழையுமென்ற சிஷனிட பின்னேவந்து
அடியேன் வந்தேனென்று பணிந்திட்டாரே. (61)

பணிந்திட்ட கொங்கணரை வாரிமோந்து
பராபரமே நிர்க்குணமே பண்புள்ளோனே
அணிந்திட்ட அறுவரையிற் சொக்கிச்சென்ற
ஆதியென்ற பராபரமே யையாவையா
மணியிட்ட சிலம்பொலியைக் கேட்டமூர்த்தி
மார்க்கத்தை யெப்படித்தா னேறினீரோ
கணியிட்ட நிர்மலமா மனத்தினாலே
கைலாய தேகமென்ன தங்கமாச்சே. (62)

ஆச்சப்பா அடிமைவர வேணுமென்று
ஆசைகொண்டே யிருக்கையிலா ளனுப்பிவைத்தீர்
வாச்சப்பா மனுவொன்று அடியேனுக்கு
மைந்தன்மேல் கடாக்ஷத்தால் சொல்லவேணும்
ஒச்சப்பா கொங்கணரே யுபசாரமென்ன
வோங்கினதை யுரைக்கிறேன் கேளுகேளு
காச்சப்பா வுலகத்தி லெடுத்ததேகங்
கைலாசச் சட்டையாங் கருவைச்சொல்வேன்: (63)

கருவென்ன வொன்றுமில்லை மேருவுக்குநேரே
காணப்பா யீசானங் கைலாயமாச்சு
உருவென்ன வெடுத்ததெல்லாங் கைலாயதேக
முத்தமனே நிராதார ஞானசித்தி
குருவென்ன நிர்க்குணத்தின் மவுனத்துள்ளே
குவிந்துரைத்த பெருமையினல் கைலாயமாச்சு
அருவென்ன மகாரவித்தை மூட்டிக்கொண்டு
ஆதிவித்தாங் கற்பமது உண்டுபாரே. (64)

பாரப்பா சூதமுண்டு மவுனத்தாக்கப்
பளிச்சென்ற எழுசட்டை பண்பாய்ப்போகும்
நேரப்பா அச்சடந்தான் கைலாயதேகம்
நிமிஷத்தே சித்தியா முன்நினைவுக்கையா
ஆரப்பா வுனைப்போலே நினைந்தபடிபண்ண
வரிதரிது கூடாது மூடருடபேரா
சேரப்பா சொல்லிவிட்டே னென்றன்பேச்சு
செப்புமுன்னே கைலாய முற்றுப்பாரே. (65)

உற்றுநின்ற பலநூலைப் பார்த்துப்பார்த்து
உரையாமல் வேதாந்தஞ் சித்தாந்தமென்று
பற்றிநின்ற பரவசந்தா னென்றுஉன்னிப்
பாராம லலைந்துகெட்டா ரனந்தங்கோடி
முற்றிநின்ற விடமெங்கே ஞானமெங்கே
மோனமுடன் யோகமெங்கே யதற்குமேலாய்க்
கொற்றிநின்ற மேல்மூலத் துரியமெங்கே
கூடுவார் மெய்ஞ்ஞானக் குறைவிதாமே. (66)

குறைவேது வாசனையாத் தொய்தத்தோடு
கூடவல்லோ மெய்ஞ்ஞானம் புனைந்துநிற்கு
மறைவேது மறையினிட அந்தமேது
மறைவற்று நின்றதொரு வெளியங்கேது
துறையேது துறைக்குள்ளே சோதியேது
சூட்டியிந்த விவரமெல்லாம் ஞானந்தோற்றும்
அறையேது அல்லவென்று சம்சாரத்துள்
அழுத்துமப்பா தொய்தத்தி னுண்மைதானே. (67)

ஆண்மையென்றால் தொய்தத்தி னாண்மையல்லோ
அகண்டமுத லண்டமெல்லாம் ஞானந்தோற்றம்
மாண்மையென்றால் வாய்ப்பேச்சாம் ஞானிவாயில்
மண்ணையள்ளிக் கூறுகொண்டு மலங்கப்பார்த்துக்
கேண்மைகொண்டு வுலகமெல்லாங் கெடுத்துஆட்டிக்
கெடியான மண்ணுடன்பொன் னாசையாலே
தாண்மையென்ற பிறப்பிறப்பை நீக்கவேண்டின்
சண்டாளக் கோபமதைத் தள்ளுகள்ளே. (68)

தள்ளுகிற விருப்புவந்தால் கருவைக்கேளு
சாதகமாய்க் குண்டலிக்குள் வாசிவைத்துத்
தெள்ளுகிற பிராணயம் பண்ணித்தீருந்
திரண்டொலியுஞ் சிலம்பொலியுங் காணும்காணும்
நள்ளுகிற கண்டத்தே யங்கென்றாணு
நலம்பெரிய புருவமையந் திறந்துபோகும்
அள்ளுகிற கனிபோலே யமிர்தம்வீழும்
அப்பவல்லோ காயசித்தி யறிந்துகொள்ளே. (69)

அறிந்திந்த மதியான விந்துமட்டு
மப்பனே யோகமீ தறிந்துகொள்ளு
பரிந்திந்த விந்துமுதல் நாதஞ்சித்தி
பாங்கான சிவத்தோடு பரந்தான்கேளு
அறிந்திந்தப் பராபரத்தோ டாறுகேளு
அப்பனே மௌனத்தைத் தூக்கிக்கண்டால்
செறிந்துநின்ற ஞானத்தின் யோகமாச்சு
செயத்தம்ப மவுனத்தைச் சென்றுகாணே. (70)

காணப்பா பராபரத்தின் மேலேயாறு
கைவிட்ட வகண்டமொன்று நிர்க்குணந்தானென்று
பூணப்பா நிர்க்குணந்தான் நிராதாரந்தான்
புகழான நிர்மலந்தான் போதத்தந்தம்
தோணப்பா விதுவாறுங் காணப்போகச்
சொல்லுகிற வார்த்தையென்றால் கேட்டிருப்போமைந்தா
ஊணப்பா சடம்விட்டு அறிவுவிட்டு
உற்றுநின்ற வண்டத்தே யறிந்துகொள்ளே. (71)

அறிந்துகொள்ளு மதியளவு பிண்டத்துள்ளே
அப்பனே யாறுதல மறிந்துகாணும்
அறிந்துகொள்ளு விந்துவின்மேல் பரத்தின்மட்டும்
அறிவுக்குள் சக்கரந்தா னப்பாகேளு
அறிந்துகொள்ளும் பரத்தின்மேல் போதமட்டு
மாதார நிர்மலத்தின் வரைகளாறும்
அறிந்துகொள்ளு மேலாறுங் காணப்போகா
தாச்சரியம் கொங்கணரை விட்டுக்காணே. (72)

காணப்பா தசதீட்சை கடந்தபின்பு
கைவிட்ட சூத்திரத்தை யாசான்காட்ட
ஊணப்பா அதுமவுன மற்றதெல்லா
முறவார்த்தை அகாரமுத லுகாரமென்பார்
வீணப்பா சிரசுமேல் வேதாந்தக்காக்ஷி
விரைந்ததிலே யும்மென்று ஊணென்பார்கள்
பூணப்பா வும்மென்ற நாதமாமோ
போக்கறியான் சொல்லுகிற ஞானந்தானே. (73)

தானென்ற விடங்காட்டி நாதங்காட்டி
சாற்றுகிற மவுனத்தின் சார்புகாட்டி
வானென்ற வெளிகாட்டி யறுதலமுங்காட்டி
வாய்மூடி ஞதிக்க வகையுங்காட்டி
ஊனென்ற வுடம்பைவிட்டுக் கேசரியுங்காட்டி
யூமைநின்ற விடங்காட்டி யுரைக்கப்பண்ணி
கோனென்ற குருவேனும் வாய்பேசலாமோ
குரும்பரே குருசொல்ல விரண்டுமாமே. (74)

ஆமிந்த வுலகத்தோர் ஞானவீதி
யறிந்தேறிக் கூடுவது அரிதுமெத்த
ஓமிந்தக் குண்டலியைத் தொட்டுமுற்ற
ஊதுவது கடினமெத்த யோகமார்க்கம்
வாமிந்த வாமத்தே நின்றுகொண்டு
மகத்தான பானமுண்ண வாய்க்கும்ரண்டும்
சோமிந்தச் சடையில்வைத்துச் சின்மயத்தைக்காட்டும்
சொற்பெரிய பூரணந்தான் சொன்னவாறே. (75)

வாறான குருவினிட வாழ்வைக்கேளு
மகத்தான சடையின்மேல் மதியுஞ்சூடி
தாரான நெற்றியிலே தீயைவைத்துச்
சர்ப்பமல்லோ ஆபரண மாகப்பூண்டு
வீறான கரியுரிவை மேலேபோர்த்து
விளங்கியதோர் புலித்தோலை யிடையிற்கட்டிக்
கூறான சுடுகாட்டிற் குடியுமாகிக்
கூடினார் பலியெடுக்கக் கூடினாரே. (76)

பலியெடுத்த குருவினிட வாமபாகம்
பகர்ந்துநின்ற வென்தாயார் பரிசுகேளு
பொலியெடுத்த அஷ்டமா சித்திநிற்கப்
புகழ்பெரிய ரத்தின பரணம்பூண்டு
நலிவில்லா யோகாப்பி யாசஞ்செய்து
நண்ணுமிரு பதச்சேவை காண்பதற்கு
ஒலியெடுத்த நவகோடி தேவர்சித்த
ரொன்றான கணநாதர் போற்றுவாரே. (77)

அறிந்துகொள்ளு மென்தாயோ துரைப்பெண்ணப்பா
அப்பனே யொருதேறு மேமையேமை
அறிந்துகொள்ளு மிவளைமுன்னே யையாவைத்து
ஆதரித்துக் கேட்டதெல்லா மருளிச்செய்வாள்
அறிந்துகொள்ளு மகண்டத்தே ஞானசத்தி
ஆத்தாளைப் பூசியற் பத்துமீவாள்
அறிந்துகொள்ளுஞ் சடமெல்லா மவளேயாச்சு
அப்பனுக்கு எலும்போடு நரம்பிரண்டே. (78)

இரண்டான வாயுவினி லொன்றுசத்தி
நேராகச் சிவமேது பிராணவாயு
ஒன்றாக நாடிநின்றால் சுழிமுனையுமாச்சு
யோகமுமாம் ஞானமுமா முற்றுவது
தண்டான சுழிமுனைதா னடுமையம்நிற்குஞ்
சாதகமா யிதற்குள்ளே முக்கிரந்தியுண்டு
நன்றான சுழிமுனையிற் பிராணனேறில்
நாதாந்த யோகமிது நாடிக்காணே. (79)

காணப்பா நெஞ்சினுள்ளே பிராணயோகங்
கண்டுகொள்ளுந் தாமரையி னூல்போலாடும்
ஊணப்பா வதிலிரட்டி அபானவாயு
உற்றுநின்றி ரண்டையுநீ கண்டாயானல்
பூணப்பா விதற்குள்ளே ஞானயோகம்
புஜண்டருக்குச் சித்தியிது கைலாயதேகம்
தோணப்பா நவகோடி சித்தர்கண்டார்
சுகயோக மாவதிந்தத் துறையுமாமே. (80)

ஆமப்பா ஆசைவிடக் கருவைச்சொல்வேன்
அறிந்துகொண்டு அறிவாலே நின்றுபாரு
சேமப்பா கிரோதாயி யாரென்றுக்கால்
செகமெல்லாம் பெண்ணென வுருத்தானப்பா
ஓமப்பா பொன்மண்ணும் பெண்ணினுசை
யொத்துநின்ற விந்திரிய மயக்கத்தாசை
நாமப்பா வென்றுசொன்ன ஆண்மையாசை
நல்வினைக்குந் தீவினைக்கும் வித்துமாச்சே. (81)

வித்துக்குள் பாவமென்ன புண்ணியந்தானென்ன
வெகுகோடி புண்ணியத்தால் புருஷஜன்மம்
பத்துக்குள் வெகுகோடி பாவபுண்யம்
பாழான பெண்ஜனன மெடுத்தவாறு
கொத்துக்கு ளிவையறிந்து பாவமான
குழிக்குள்ளே விழ்வார்மா னிடர்களோயோ
எத்துக்கு ளிவையறிந்து வேறுய்நின்று
இகழ்ந்தவனே மெய்ஞ்ஞான விசனுமே. (82)

பூரணமே யகண்டமே யகத்தினந்தம்
பொங்கிநின்ற நிர்க்குணமே யென்னையின்ற
காரணமே யுலகிற்பெண் ணுசைபோலக்
கலந்துநின்ற சுகமில்லை கருதிக்கொண்டேன்;
ஆரணமே யதீதத்தில சுகந்தானென்ன
அப்பனே சொல்லுகிறே னறிந்துகொள்ளு
வாரணமாக் குவிமுலையா ராசைவிட்டால்
மகத்தான மூவுலகும் வணங்கும்நேரே. (83)

நேரான பெண்ணாசை நீங்கிற்றானல்
நிலையான திரோதாயி மாயைபோச்சு
தூரான வேதாந்த வெளியிற்சொல்வார்
சும்மென்ற சுகஞ்சொல்ல வாயோ இல்லை
வாராய்நீ யென்மகனே பெண்ணாற்சிக்கி
மகத்தான ரிஷிகள்சித்தர் கோடிகெட்டார்
தாரான சித்தரொடு பஞ்சகர்த்தர்
தயங்கிநின்று படும்பாடு சாற்றுவேனே. (84)

சாற்றுகிறேன் வீதியிலே படுகுழிதானுண்டு
தன்மேலே புல்லோடு செடியுமுண்டு
மாற்றுகிறேன் வீதியிலே நடந்தோன்வீழ்ந்த
வாறெருக்கும் பெண்ணான் மாயக்கூபம்
ஆற்றுகிறே னென்றாலு மாற்றப்போகா
அரகரா பெண்ணாவு கடித்ததானல்
போற்றுகிறே னென்றாலும் பொல்லாக்காமம்
பொரிநெருப்பி லிட்டநெய்போற் பொங்கும்பாரே. (85)

பொங்குகின்ற காமமென்ன சிவத்தின்கூறு
பொல்லாத ஆசையென்ன மாலின்கூறு
மங்குகின்ற மோகமென்ன மகேசன்கூறு।
மருவுமந்த மூன்றாலு முலகம்பாழாய்த்
தங்குகின்ற யோகம்போய் ஞானம்பாழாய்ச்
சமாதியெல்லா மிந்திரியச் சாரமூடித்
தொங்குகின்ற மோக்ஷத்தின் மனிதரைப்போற்
சூனியமாம் ஞானியெனத் தோற்றுவாரே. (86)

வாரான பெண்ணாசை விட்டேனென்பார்
மருவியவள் தனிப்பட்டால் சரணஞ்செய்வார்
தாரான சயனத்திற் பெண்தான்சொல்லில்
சதாசிவனால் முடியாது மற்றோரேது
கூரான விந்துவிடக் கோபமோகங்
குறியழிக்கும் நினைவழிக்குங் கூட்டைக்கொல்லும்
வீரான விந்துவுக்கு மேலேநின்று
விருதுபெற்ற மௌனியல்லோ வெட்டினரே. (87)

வெட்டினர் மௌனியந்த விந்துபாம்பை
வேதாந்த மென்றதொரு வாளினாலே
தட்டினர் மாயையைத்தான் சண்ணிக்கீழே
சச்சிதா னந்தவெள்ளச் சார்பினாலே
இட்டினு ரொட்டினர் நிர்க்குணத்தின்
உத்தமனே யதுவல்லோ ஞானவிதி
தெட்டினர் தெட்டினர் சகலமெல்லாம்
ஜெகசால வித்தையென்று தெளிந்துபாரே. (88)

தெளிவதுதா னெளிதல்ல வாய்ப்பேச்சல்ல
சிங்காரப் பெண்கண்டால் ஞானம்பேச்சு
அழிவதுதான் சடத்துக்கு அடுத்துக்கூறு
அதாமுண்டு கூடுவது போகமென்பார்
கழிவதுதான் காலேது வாசியேது
கைவிட்ட மௌனத்திற் கலப்பதேது
ஒழிவதுதா னெங்காளோ வென்றுலோக
மொருகோடி மாண்டார்க ளுணிக்காணே. (89)

காணப்பா பிறப்பிறப்பும் பெண்ணலாச்சு
கைகடந்த மாயமெல்லாம் பெண்ணலாச்சு
பூணப்பா விந்திரியம் பெண்ணலாச்சு
புகழ்பெரிய வாசனையும் பெண்ணலாச்சு
தோணப்பா மனம்புத்தி யாங்காரத்தில்
சொக்கியது பெண்ணாலே தட்டிப்பாரு
ஊணப்பா லூணப்பா வுரைக்கச்சொன்னே
னுலகத்திற் றிரியாதே விண்ணிலாடே. (90)

ஆடையிலே விண்ணுக்குட் சித்தர்கோடி
யந்தந்த மலைகளினு தாக்கள்கோடி
ஊடையிலே யண்டத்தில் முனிவர்கோடி
உற்றுநின்ற பதமளவும் ரிஷிகள்கோடி
தேடையிலே சதாநிர்த்தம் வேதாந்தம்பாரு
சேர்ந்துநின்று பேசையிலே தெளியச்சொல்வார்
நாடையிலே யெந்நேரம் மவுனத்தில்நாடு
நரகமாம் வாசனைதான் நன்றாய்க்கேளு. (91)

சேளப்பா யிதைவிண்டு உல்கஞானி
கேட்டதெல்லாஞ் சொல்லுறேன் மக்காள்மக்காள்
நாளப்பா ஜெகமெல்லாஞ் சாங்கமென்பான்
நலான நூல்பாரான் தீக்ஷையாயான்
தாளப்பா மவுனமென்பான் விண்ணைப்பார்ப்பான்
சாதகத்தை விட்டுவிட்டுச் சீவனத்திற்செல்வான்
நாளப்பா தினந்தோறுந் தர்க்கம்பேசி
நலமான பெண்ணோடு மயங்குவானே. (92)

மயங்குவான் பொன்றேட வெகுண்டுபேசி
மகத்தான ஞானமெல்லாம் வந்தவென்பான்
தயங்குவான் மண்ணாலே சார்புகாணுன்
ஜாதகமா யோகத்திற் சார்ந்தேனென்பான்
றியங்குவான் நோய்வந்தாற் பூரணமேயென்பான்
ஜெகஜால திரோதாயி சிரிப்பாள்பார்த்து
முயங்குவான் சமாதிவிட்டே ஐயோவென்பான்
மூடமக்காள் ஞானமெல்லா முலகிற்பாரே. (93)

பாரப்பா சரீரமிது சமாதிக்காகா
பாழான ஸ்தூலமிது வென்பார்கோடி
நேரப்பா வாதம்வந்தால் ஞானம்வருமென்று
நேராக வலைந்தவர்கள் கோடாகோடி
ஆரப்பா வுலகத்தில் ஞானியுண்டோ
ஆராய்ந்து நான்கண்டே னென்பார்கோடி
ஏரப்பா வுழுதல்லோ வெள்ளாமையாகும்
ஏரில்லா னறுத்தடித்த கதையுமாச்சே. (94)

கதையாச்சு வுலகத்தில் ஞானமோடுவாதங்
கைகண்டாற் சொல்வாரே கற்போல்நெஞ்சம்
அதையாச்சு இதையாச்சு என்றுசொன்னால்
அவன்கையி லொன்றுமில்லை யறிந்துகொள்ளு
உதையாச்சு அரனுடனே தொழிலேநித்தம்
முதுவான வன்வாதி யுண்மைகேளு
சுதையாச்சு ஆனாலும் பொங்கியுள்ளம்
சுடுவான்பா ரசயோகி ஞானிதானே. (95)

தானென்ற வாதியிலே ரெண்டுவிதமுண்டு
சண்டாள வாதியென்று லுண்டுடுத்துப்பொங்கி
வானென்ற ஞானமென்ன வேதைகண்டபின்பு
மகத்தான பெண்ணோடே கூடியாடி
கானென்ற ராகமொடு கேளிக்கைபார்த்துக்
கண்டபெண்ணைத் தாய்போலே கருதிச்சென்று
ஊனென்ற வுடம்புக்கு அடுத்ததுபோவென்பா
னுலுத்தனுக்குச் சனனமென்ற நகரந்தானே. (96)

நரகமென்ற பெண்மேலே யாசைவிட்டு
நாதாந்தம் வேதாந்தஞ் சித்தாந்தம்பார்த்து
நரகமென்ன வுலகமெல்லா மனதில்வைத்து
நலமான தேவியுட கிரியையிலேநின்று
நரகமென்ன ஜடமுதலாய் நாமல்லவென்று
நாட்டினுள்ளே தசதீட்சை கடந்தபின்பு
நரகமென்ற சிவசொத்தை வறுமைபோல்நின்று
நாமறியோம் வாதமென்று இருப்பார்காணே. (97)

இருக்கையிலே சதகோடி தொழிலேச்செய்வார்
இத்தனைக்குப் பொருளேது இவன்வறுமைக்கென்பார்
இருக்கையிலே செயநீருஞ் செந்தூரஞ்சுன்ன
மெடுத்தெடுத்து அடுக்கிவைப்பார் அனேகங்கோடி
இருக்கையிலே தொழிலெடுப்பா ரார்க்குங்காட்டா
ரில்லையென்பா ருண்டென்பா ரனேகம்பேர்கள்
இருக்கையிலே சதாநித்த மறிவாலூட்டி
யிருப்பார்கள் மவுனமுத்த வாதிதானே. (98)

வாதியென்று லவன்வாதி மவுனவாதி
மகத்தான பிரபஞ்சத் திருந்தாலென்ன
வாதியென்றால் ரசவாதி ஞானவாதி
வாங்காமற் சமாதியிலே யிருந்தவாதி
வாதியென்றால் நிஜவாதி நிர்மலத்தின்வாதி
வாய்திறக்க அண்டத்தே வாழ்ந்தவாதி
வாதியென்று லவரிடத்தே சித்தர்செல்வார்
மயக்குகின்ற சென்னமில்லை முத்திதானே. (99)

முத்தியிந்த வாதிக்கு வருகுமென்று
மூச்சுமுதற் சிவன்சொன்ன ரென்றுசொல்லிக்
கத்தியிந்தச் சிவசொத்தைப் பெண்ணுக்கீந்து
பாழான விஷயமெல்லாம் பண்ணிப்பண்ணி
அத்தியென்ற வஞ்சகத்தைப் பண்ணிப்பாவி
ஆங்காரத் தால்திரிந்து வேதைபோட்டு
மற்றிநின்று அலைந்தவர்க்கு நரகமெய்தி
மாளுவார் கோடிஜென்ம மாளுவாரே. (100)

மாளாம லிருக்கவல்லோ வாதஞ்சொன்னர்
மாண்டிறந்து மாண்டிறந்து பிறக்கைகன்றே
வெருளாமல் மனம்பிடித்த வாதியானல்
வெகுசுளுவு ஏறுதற்கு ஞானவீதி
அருளாமோ பொருளாமோ வென்றுஎண்ணி
அலையாமல் நின்றவனே வாதயோகி
இருளாமோ வெளியாமோ வென்றுஎண்ணி
பேகவெளி சுத்தஇரு ளாகிப்போமே. (101)

ஆகவப்பா இருபத்து அஞ்சுநூறு
அறைந்திட்டேன் வாதத்தை யறிந்துகொள்ளும்
ஆகவப்பா யிதற்குள்ளே ஞானம்நூறு
அப்புறத்தே சொன்னதொரு ஞானம்நூறு
ஆகவப்பா இருப்பது இருநூறுக
அறிந்தமட்டும் சொல்லிவந்தேன் வல்லோருண்டோ
ஆகவப்பா பார்த்துரைத்தா லிகபரமுஞ்சித்தி
ஆதியென்ற குருவருளால் சொன்னேன்முற்றே. (102)

**கைலாய சட்டைமுனிவர் மூன்ஞானம் நூறு**

முற்றிற்று.

உ

பரமபதிதுணே.

## கைலாய சட்டைமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# பின் ஞானம் நூறு.

கைலாயப் பரம்பரத்தி லென்னையாண்ட
    கடவுளெனுந் தெக்ஷணு மூர்த்திபாதம்
கைலாயத் தெனையீன்ற ஆயிபாதங்
    கருணையுடன் போற்றிநித்தம் ஞானம்சொல்வேன்
கைலாய நிர்க்குணமே நிர்மலமே தேவர்
    காட்டுகின்றீர் கேசரியைச் சின்மயமாய்க்கையில்
கைலாய பரம்பரையாய் வந்தபேர்க்குக்
    கடைப்பிள்ளை ஞானத்தைப் பாடுவேனே. (1)

பாடுகிறேன் சரியையென்ன தேவியுடதீட்சை
    பரிவான கிரியையென்ன தேவியுடபூஜை
பாடுகிறேன் யோகமென்ன மாசற்றவமுதம்
    பாங்கான ஞானமென்ன மௌனத்தந்தம்
பாடுகிறேன் திடத்தனு யிதோகிதம்
    பாங்கான அஞ்சலிதான் மனமடக்குந்தேகம்
பாடுகிறேன் பரன்முனிவ னுக்கேயென்றால்
    பரிவானல் ஞானவித்தை பலிக்குந்தானே. (2)

தானென்ற ஞானத்தின் பூமிகேளு
    சாதகமா யோகமென்ற அகாரவீடு
வானென்ற பூமியிலே வித்தைகேளு
    மருவிநிற்கு மறிவான வுகாரவிந்து
வேனென்ற வெளியெல்லாம் படைத்துநின்று
    வேதாந்த அண்டமென்ற மகாரமாச்சு
கோனென்ற காதமங்கே குமூரியோடுங்
    கூப்பிட்டாற் கேளாது கண்ணும்போச்சு. (3)

போச்சப்பா தத்துவங்க ளநித்யப்பட்டுப்
புலன்கெட்டு நிலக்கெட்டுப் பொறியுங்கெட்டு
ஆச்சப்பா மனவரையில் மயங்கிநின்று
ஆடுகிற படம்போலே யசைந்துதள்ளு
நீச்சப்பா கடுநீச்சு நிரோதாயிவெள்ளம்
நிலையேது கரையேது தவணையேது
மூச்சப்பா அடங்குமுன்னே மாயைவந்துசுற்றி
முதிர்ந்தறிவைத் தள்ளிவிடு மோசங்காணே- (4)

காணப்பா மனவரையா மாறுக்குள்ளே
கடந்தேறப் போகாது கலக்கமெத்த
ஊணப்பா வென்றுசொன்னால் மனமூணாது
வுற்றுமெள்ளப் பிடித்தாலு மாயைவந்துதட்டும்
வீணப்பா வுலகத்தோர் ஞானமெல்லாம்
வேதாந்த சித்தாந்த மென்பார்கோடி.
தோணப்பா ஞானமென்ன கண்டிப்பில்லைச்
சுடர்கோடி வொளிபோலத் தோன்றுந்தானே. (5)

தானென்ற நிர்மலமா மனத்தின்வீதி
தாண்டரிது தாண்டினு லறிவுதோற்றும்
கானென்ற மனதுசா தகத்தைக்கேளு
கற்பமுண்ண வல்துண்ணல் வாசிதோற்றும்
பானென்ற பானத்தின் போதையிலேநில்லு
பலகாலுங் கேசரத்தில் மனந்தானெட்டும்
வானென்ற வெட்டவெளி வடிவுகாணு
மாய்ச்சல்மெத்த மாய்ச்சல்மெத்த மருவிக்கூடே. (6)

கூடுவது இமைக்குமுன்னே குளிகைகூட்டுங்
கூப்பிட்டால் பூரணந்தான் கூடப்பேசும்
மாடுவது மனவரையில் மாய்ம்போக்கு
மருவிடிலே சொக்கிநின்று ஆட்டுவிக்கும்
நாடுவது பூரணத்தி லேற்றிக்காட்டும்
நலமான சாணையாற் கெவுனமீளுஞ்சூதம்
தேடுவது சித்தருக்குக் குளிகைதேட்டுச்
செகத்தோர்க்கு வாதமென்ற தேட்டுத்தானே. (7)

தேட்டான வரைகடந்து மனமுந்தாண்டித்
தெளிவான வறிவினுட வரையுந்தாண்டி
நீட்டான பூரணத்தின் வரைகாணவென்று
நேரான மூன்றுவரை யேறிச்சொக்கிப்
பூட்டான பூட்டென்று இரங்கிவிட்டேன்லமைந்தா
புகழான பெருவெளியி லேறப்போகா
ஆட்டான கைலாய பரம்பரையாய்வந்த
வாச்சரிய மூலகுரு வாக்குங்கேளே. (8)

கேளப்பா மூலருக்குக் காலாங்கிபிள்ளை
கெடியான காலாங்கி மைந்தன்போகர்
நீளப்பா போகர்பிள்ளை கொங்கணர்தான்கேளு
நேராக நான்குமுறை பேரனுகித்
தாளப்பா மேருவிலே தவசுபண்ணிச்
சாதகமாய்க் கைலாய வர்க்கமானுர்
ஆளப்பா பிள்ளையென்ரு லவரேபிள்ளை
யாச்சரிய மின்னுமுண்டு சொல்லுகின்றேன். (9)

சொல்லுகிறேன் சிங்கென்று முன்னேயூணிச்
சேர்திகண்ட பின்பதிலே மனதையூணிச்
சொல்லுகிறேன் அங்கென்று பின்னேயுன்னிச்
சோதியிலே அக்ஷரங்கள் தனமுங்கண்டு
சொல்லுகிறேன் பின்பல்லோ மவுனமுன்னித்
தொடர்ந்தேறித் தளமெல்லாம் பார்த்துக்கொண்டு
சொல்லுகிறேன் புருவமைய மனத்திற்கூடித்
துரிதமென்ற அறிவினுள்ளே சொக்கினுரே. (10)

சொக்கியல்லோ அறிவைவிட்டு அகண்டமேறித்
துயரறவே சமாதியுள்ளே கற்பமுண்டு
சொக்கியல்லோ மூன்றுவரை சடத்தோடொக்கச்
சுரூபவரை காணவென்று துணிந்துபொங்கிச்
சொக்கியல்லோ ஏறுதற்கு இன்னவிதமென்று
சோதித்துக் குளிகையெல்லாம் பார்த்துப்பாாத்துச்
சொக்கியல்லோ எற்றிவைக்குஞ் சுரூபமணியென்று
சூக்ஷமாய் மூலருட நூல்பார்த்தாரே. (11)

பார்த்தறிந்தா ரிக்தமணி யாவதென்று
        பரிவான கைலாய தெக்ஷணமூர்த்தி
சேர்த்தறிந்த தம்முடைய வர்க்கமான
        சீடரிலே திருமூலர் சண்டிகேசர்
மாற்றறிந்த சனகாதி நால்வரோடு
        மருவிநின்ற வியாக்ரர்பதஞ் சலியினோடு
போக்கறிந்த வடியேனே டொன்பதுபேர்பிள்ளை
        புகழான பூரணத்தி லெழும்பென்றாரே. (12)

எழும்பையிலே நிர்மலம்போற் சடமோகாண
        தேனென்றாற் பூரணந்தா னெய்தும்பாரு
எழும்பையிலே குளிகைமுதற் கண்டிற்பத்து
        ஏற்றியதோர் தீபத்தின் சுடர்போற்காணும்
எழும்பையிலே தேகமில்லை கோடிபோற்காணும்
        எடுத்தஜடஞ் சூட்சமா யிருந்ததென்றால்
எழும்பையிலே மேலெழும்பி மௌனமுற்று
        இருந்துறைத்த சமாதியுட பலந்தான்காணே. (13)

காணப்பா சொரூபமென்று கமலிதானென்று
        கையடங்கா தட்டமா சித்தியென்று
பூணப்பா கைகொடுத்துச் சின்மயமாந்தேவர்
        பொருளோடே யருளான போக்குக்காட்டித்
தோணப்பா தோன்றிநிற்கும் சும்மா அம்மா
        சுகமாக இசைந்ததிலே சொக்குமென்றார்
வீணப்பா மற்றதென்றார் சின்மயத்தைக்காட்டி
        வேதாந்த மூலத்தை விளம்பென்றாரே. (14)

விளம்பினர் சனகாதி வேதாந்தங்கோடி
        விதித்தாரே மவுனத்தைச் சண்டிகேசர்
விளம்பினர் பதஞ்சலியு மனந்தங்கோடி
        விரித்தல்லோ திரிமூல ரனேகஞ்சொன்னார்
விளம்பினர் வாவாத மென்றயானும்
        விரியாமலிருநூறு ஞானஞ் சொன்னேன்
விளம்பினர் வெகுவாக என்னூல்கொஞ்சம்
        வேதாந்த மிருநூறும் விஸ்தரிந்துகாணே. (15)

காணப்பா மும்மணியுங் கயிலாயவர்க்கம்
கழியாமற் பிள்ளைகட்கே மற்றோர்க்கில்லை
தோணப்பா விதமூன்றுஞ் சித்தர்சொல்வார்
சொற்பெரிய பூரணமே சொல்லவேணும்
வீணப்பா ஆராலுஞ் சொல்லக்கூடா
வேதாந்த அந்தத்தில் வெளியிற்கூட்டும்
ஆணப்பா வறுபத்து நாலுமரபுக்குள்
ஆருக்குங் கிடையாது அறியார்காணே. (16)

அறியாத குளிகையுடன் சாரணையிற்குத்து
அதன்பெருமை காணவென்றால் கொங்கணரக்கேளு
அறியாத வண்டமுதற் புவனம்பார்த்து
மருவியதோர் பதம்பார்த்துத் திரிந்துஆடிக்
குறியாகக் கற்பமெல்லா மேறிப்பார்த்துக்
கூறாத பூரணத்தைக் காண்பேனென்று
நெறியாக மனமுறைக்கக் குளிகைகட்டி
நேராக மனவரையி லேறினாரே. (17)

ஏறினா ரறுவரையி லியல்புக்கண்டு
இதமாக வறிவினிட வரையிற்சென்று
தேறினர் மனமுறைத்தார் கண்டத்தேறச்
சேர்ந்தேறிச் சேர்ந்தேறி யொருவரையிற்றாண்டிக்
கூறினாரிவ்வளவு மொன்றோ வென்றார்
கூசாமல் மறுவரையில் குதிரைபோட்டார்
மாறினார் சென்றமனம் பிடித்துச்சென்றார்
வரைமூன்றுங் கடக்கவொரு கற்பமாச்சே. (18)

ஆச்சப்பா நால்வரையி லேறும்போது
அரகரா வொருகோடி யிடிபோல்நாதம்
மூச்சப்பா வோடாது முன்பின்றோ
முதிர்ந்தமன மாயையினல் பின்னுஞ்சென்றார்
கூச்சப்பா ஐவரையிற் போகின்ற
குறுகுறென்று விழித்ததிலே மனமுந்தேறிப்
போச்சப்பா சடமொன்று நிராசையாகிப்
புக்கினர் அறவரையிற் புக்கினரே. (19)

புக்கியல்லோ சுழல்காற்றின் றரும்புபோலே
புலம்பினர் மூலருட பேரன்பேரன்
மக்கியல்லோ மனம்போச்சு குளிகைபோச்சு
மாறாத மௌனமுன்னே மாண்டுபோச்சு
ஒக்கியல்லோ சிலம்பொலிதா னுள்ளேவாங்க
ஓகோகோ குளிகையது கீழேவாங்கச்
சொக்கியல்லோ என்செய்வே னென்றுஏங்கித்
தூரியத்தை விட்டுமெள்ளக் கீழ்க்கொண்டாரே. 20)

கீழ்க்கொண்டார் கீழ்க்கொண்ட கெடியாஞ்சித்தர்
கேசரத்தை விட்டுமெள்ள அறிவில்வந்துநின்று
நாட்கொண்ட பாடெல்லாம் நினைத்துக்கொண்டு
நான்பிழைத்தேன் நான்பிழைத்தே னென்றுசொல்லி
ஆட்கொண்ட என்குருவே பூரணத்திநின்றீர்
ஆச்சரிய மெனையின்று மிவ்வரைவேயையா
வேட்கொண்ட என்றவத்தை யீந்தேனையோ
வெறுவெளியாஞ் சிலம்பொலியை மேவென்றாரே. (21)

மேவென்று சொல்லுமுன்னே மேற்கண்டபோகர்
வேதாந்த சிரோமணியைப் பெற்றதினன்மைந்தா
கோனென்ற குருவுக்கு அவரேசிட்டர்
கோடிலக்ஷத் தொருசிஷ ருண்டோகாணேன்
பானென்ற வேதாந்தஞ் சித்தாந்தம்பார்த்துப்
பறக்கிறதோர் குளிகைமுதல் வாதம்பார்த்துத்
தேனென்ற கைலாய வர்க்கமாகிச்
சித்தருக்குச் சித்தராய் ரிஷியானாரே. (22)

ரிஷியென்ன சிலம்பொலியைக் கண்டாருண்டோ
நேராக வதற்குள்ளே சேர்ந்தாருண்டோ
ரிஷியென்ன ரஸவித்தை யறிந்தாருண்டோ
நிமிஷத்தில கவனமுற்றுத் திரிந்தாருண்டோ
ரிஷியென்ன அண்டமுதற் புவனந்தாண்டி
நிரைநிரையாய்க் கண்டுவந்தோ ருண்டோசொல்லும்
ரிஷியென்ன மவுனமுற்றுச் சமாதிக்குள்ளே
நின்றதினு லதிகமையா நினைவாய்க்காணே. (23)

காணப்பா ரிஷியேனுஞ் சித்தரேனுங்
காரணமாய் மவுனத்தே நின்றோரேனும்
பூணப்பா பூரணத்தி னின்றோரேனும்
பொன்னாக மரமுதலாய்ப் புகழ்ந்தோரேனும்
ஓணப்பா வாசியெனும் குதிரையேனும்
ஒன்றுமற்றுத் தன்மயமாய் நின்றோரேனும்
தோணப்பா யிதுவெல்லாங் கொங்கணர்க்கேயல்லால்
சூழுலகிற் சித்தருண்டோ சொல்லிடீரே. (24)

சொல்லிடமாய் ஞானமுண்டோ குளிகையுண்டோ
சூட்சித்த கற்பமுண்டோ வாசியுண்டோ
மல்லிட்ட வாதமுண்டோ சுன்னமுண்டோ
மகத்தான சிங்கியுண்டோ ஜெயநீருண்டோ
வெல்லிடீர் விடமுண்டோ சாரணைதானுண்டோ
வெவ்வேறே கூட்டுகிற குடோரியுண்டோ
அல்லிடீர் வேலைக்கிரு வணந்தானுண்டோ
அப்பனே பதினேழு மமைத்திட்டாரே. (25)

அமைத்திட்டார் முக்காண்டம் பாடியேதா
னன்றுதித்த பிள்ளைக்கு மறிவுதோன்றும்
அமைத்திட்டார் பாடிப்பொற் கம்பிபோல்
அறிவுகெட்ட மிலேச்சருக்கும் வாதசித்தி
அமைத்திட்டார் கருவெல்லாம் வெட்டவெளியாக
அங்கங்கே மறையாமற் சொன்னார்சொன்னார்
அமைத்திட்டார் பாட்டுக்கு நமதுநூல்தா
னருகாக மறைப்பென்று அறைந்திட்டாரே. (26)

அறைந்திட்டா ரந்நூறு பிள்ளைகளைவேண்டு
அம்மம்மா வெகுதெளிவு சாத்திரந்தான்
நிறைந்திட்ட ஆரணம்போல் வெட்டவெளியாக
நீங்காமற் றறந்துவிட்டா ரருளோடுபொருளும்
குறைந்திட்ட புத்தியல்ல நிட்களமாம்புத்தி
கூறாத பொருளையெல்லாங் கூறிவிட்டார்
மறைந்திட்ட மவுனமெல்லாம் வெட்டவெளியாக
வாய்திறக்கா வித்தையெல்லாம் வழங்கினாரே. (27)

வழுங்கியதோர் கொங்கணரால் மூலவர்க்க
மகத்றவந்தா னுண்டாச்சு மக்காள்மக்காள்
விலங்கியதோர் கீர்த்தியுண்டோ வும்மாலப்பா
வெட்டவெளிக் கப்புறத்தே செல்லமாட்டீர்
முழுங்கியதோர் குளிகையென்ன காயசித்தியென்ன
மூச்சற்ற விடத்திலே நோக்கமென்ன
பீளங்கியதோர் சித்தருட வர்க்கமென்ன
பேய்மக்காள் மூவஞ்சு பேரிற்றானே. (28)

தானென்று சொன்னதென்ன என்னைப்பெற்ற
சச்சிதா னந்தவெள்ளத் தயவுள்ளாரே
கோனென்ற முக்குளிகை நமக்குண்டையா
கொடியதொரு மவுனவித்தை நமக்குண்டையா
பானென்ற வாசிவித்தை நமக்குண்டையா
பாங்கான காயசித்தி நமக்குண்டையா
வானென்ற வெட்டவெளி யேறியாடி
வருகிறேன் விடைகொடுத்து வாழ்த்திடீரே. (29)

வாழ்த்தியுன்னை யனுப்பினல் பூரணந்தான்
வரைகடந்து ஆறுவிரை வேறுவாயோ
வாழ்த்தியுன்னை யனுப்பினல் நரகத்துள்ளே
மயங்காமற் செல்லுவையோ மைந்தாசொல்லு
வாழ்த்தியுன்னை யனுப்பினு விடயிற்குள்ளே
மயங்காமற் றியங்காமல் மருவுவாயோ
வாழ்த்தியுன்னை யனுப்பினு லென்னமுன்னுல்
வாய்ப்பேச்சோ வரைகடக்கு மார்க்கந்தானே. (30)

மார்க்கமென்ன எனையீன்ற கைலாயமூர்த்தி
மகத்தான சமாதியுள்ளே கற்பமொன்றுவாழ்ந்தேன்
சேர்க்கமென்ன சிவாலயங்கள் பலியேற்றுண்டேன்
சிவமேது நீரன்றி வேறென்றுங்காணேன்
ஆர்க்கமென்ன குளிகையிட்டுச் சென்றபோதே
னங்கங்கே மனந்தேறி யேறிப்போறேன்
தீர்க்கமென்ன சொக்கினுற் சொக்கிப்போறேன்
திரும்பினுற் சடத்தோடே திரும்புவேனே. (31)

திரும்புவையோ என்மகனே திடந்தானுண்டோ
சிறுபிள்ளைப் புத்தியல்லோ செப்புருய்நீ
வரும்பிறையோ தேய்பிறையோ ரவியினுள்ளே
வருவதுபோ லல்லவது மாட்டிவாங்கும்
பரும்பிறையோ ரவிகோடி சோதிகோடி
பாங்கான வொளிக்குள்ளே கண்ணேகூசும்
அரும்பிறையோ மனந்தளும்பு மேவொட்டாது
அரகரா என்மகனே யறிவாய்நீயே. (32)

அறியாத வரைபார்க்க நான்தானேறி
ஐயனே மூன்றுவரைக் குள்ளேசிக்கி
நெறியாக நால்வரையி லேறொட்டாமல்
நிமிஷத்தி லறிவினிலே வந்துநின்றேன்
மறிவான மனம்படைத்த கொங்கணரேசித்தர்
மற்றோரை யான்காணேன் மைந்தாசொல்லு
பொறியான வழியடக்கிச் சூக்ஷமாகிப்
போனவரார் போகருட பிள்ளைதானே. (33)

பிள்ளையென்று லவரல்லோ போகருக்குப்பிள்ளை
புகழான ரிஷிகளெல்லாஞ் சித்தரென்பார்
தள்ளையென்று லவர்தன்னை மூலரிடம்போன
சச்சிதா னந்தவின்ப மானபிள்ளை
கொள்ளையென்று லவர்கொள்ளை ஞானவீதி
கொடிதான சிலம்பொலியைக் கேட்டுமீண்டார்
வில்லையென்று வந்ததினுல் முத்தியாச்சு
வேதாந்த அந்தமெல்லாம் வெளியாய்ப்போச்சே. (34)

போச்சென்று சொல்வதென்ன போய்வாறேனையா
புத்திசொன்ன புத்தியெல்லாம் போட்டிட்டாயோ
வாச்சென்ற நின்வயிற்றிற் பிறந்தபிள்ளை
வந்தாலென் கெட்டாலென் மகத்துவந்தானுண்டோ
கோச்சென்ற நாதமென்ற இடிதானென்ன
கோடிரவி காந்தியென்ன பயமுண்டாமோ
ஒச்சென்ற சிலம்பொலியைக் கண்டுவாறே
னொருமனதாய்ப் பூரணத்தி லின்னிமிரே. (35)

உன்னிடர் அண்டமுதற் புவனந்தாண்டி
யொருநொடிக்குட் பதந்தாண்டி முப்பாழுந்தாண்டி
மன்னிடமருள்மனையைக் கண்டுபோற்றி
மருவியதோர் பூரணத்திற் சென்றுஏறிப்
பன்னிடர் தினந்தோறும் பழக்கமையா
பாய்கிறே னதுகடந்து வரைகளாறும்
தன்னிடர் போகறியே னுமதருளாற்போறேன்
தவநிதியே கடாக்ஷித்து மனுப்புவீரே. (36)

அனுப்புறது பிறகுன்னை யான்சென்றுவாறே
னவ்வளவுங் குகைக்குநீ பட்டமாய்நில்
தனுப்பிறந்த களிபோல சென்றுதாண்டி
சாதகமாய்ச் சொரூபமணி மூன்றுங்காட்டி
கனுப்பிறந்த கமலியது மூன்றுக்காட்டிக்
காட்டிலே யஷ்டமா சித்திகாட்டி
உனுப்பிறந்து மோர்தாண்டி யொருவரையிலேறி
யுற்றுநின்று மறுவரையி லோடினேனே. (37)

ஓடினேன் மூவரையி லிடியோகோடி
ஓகோகோ ரவிகோடி வன்னிகோடி
வாடினேன் மனமிளைத்தேன் மயக்கமானேன்
வாயிலிட்ட குளிகைசென்று ஏறிப்போறேன்
நாடினேன் கெற்பமொன்று மூவரையிற்றாண்டி
நலமாக நாலுவரைக் குள்ளேசென்றேன்
ஆடினே னோடினே னறிவுகெட்டே
னரகரா மோசமென்று இறங்கினேனே. (38)

இறங்கினே னாலுவரைக் கப்புறமேபோக
என்னாலே முடியாது யேதோ அஞ்சில்
இறங்கினே னென்மக்கா ளும்மாலாமோ
ஏதுசொன்னாய் பேய்ப்பிள்ளா யென்னபோச்சு
இறங்கினே னன்பின்னே யிதையார்சொல்வார்
ஏகவெளி தீக்காடு இடியோகோடி
இறங்கினே னென்னாலே முடிவுகாணேன்
ஏறினார் கொங்கணர்தா னேறினாரே. (39)

கொங்கணர் மகத்துவம்.

ஏறியதோர் கொங்கணரைப் போலேயில்லை
ஏகவெளித் தீக்காட்டி லெப்படியோபோனார்
மாறியதோர் மனம்பிடித்தார் யோகநிஷ்டையானார்
மாளுவது நிஜமென்று வாமம்பூண்டார்
கூறினதோ ரறுவரையைக் கண்டுமூட்டிக்
குழறியதோர் சிலம்பொலியைக் கேட்டுமீண்டார்
ஆறியதோர் மனங்கண்டீ ரவரேசித்தர்
ஆச்சரியக் கொங்கணர்போ லார்காணேனே. (40)

காணரிது காணரிது கோடாகோடி
கண்டுநான் பரீக்ஷித்த சித்தர்க்குள்ளே
பூணரிது பூணரிது அகண்டவீதி
புக்கியல்லோ சிலம்பொலியைக் கேட்கமாட்டார்
ஊணரிது ஊணரிது வெளியிற்பார்த்து
ஓடுகிறோ மென்றீர்கள் மக்காள்நீங்கள்
தோணரிது தோணரிது தாயாய்நின்றஞானம்
சுடருக்குள் ளோடுறது துரியந்தானே. (41)

சங்கத்தார்.

தானென்ற பூரணத்தைச் சங்கத்தோர்கள்
சகலமெல்லாம் நிர்க்குணமாய் நின்றதென்பார்
வானென்ற வெளியென்பா ரொன்றுமில்லையென்பார்
வாய்பேசார் சொன்னுக்காற் போமோசொல்லு
கோனென்ற குருவருளால் சமாதிகூட்டிக்
குவிந்துநின்று மவுனத்தின் நிலையைப்பற்றி
ஊனென்ற வுடம்பைவிட்டு அறிவாய்நின்று
உலாவுறதே சங்கமென்று வுரைத்திட்டாரே. (42)

உரைத்திட்டா காரமென்ற பிருதிவிபோக்கி
ஓடுகிற வாசியினால் யோகம்பார்த்து
மறைந்திட்ட மவுனமொடு மவுனமூட்டி
மருவியந்த வறிவோடே வாசமாகி
நிறைத்திட்ட வகண்டத்திற் சென்றுஆடி
நேரான அண்டமுதற் புவனம்பார்த்து
முறைத்திட்டத் தப்பாமற் சமாதிநின்றால்
முழுயோகி முழுஞானி முமுக்ஷுவாயே. (43)

ஆமப்பா இதற்குமுன்னே யப்பியாசமார்க்க
மறையுறே னஷ்டாங்கம் நன்றாய்க்கேளு
ஓமப்பா வகையாக விரித்துச்சொல்வே
னுத்தமனே சாஸ்தியாம் நித்திரையைப்போக்கு
தாமப்பா சதாநிர்த்தம் தாரகத்தேநில்லு
சார்ந்துநின்ற கேசநிலை சதாநித்தம்பாரு
சோமப்பால் கழிந்தோடுங் கேசரியைக்கண்டால்
சொல்லாத முத்திரையைச் சொல்லுகின்றேன். (44)

சொல்லுகிறேன் ரவிமதியும் வன்னிகூடிச்
சொலித்துநின்ற விடமல்லோ கேசரிதானப்பா
சொல்லுகிறே னதைப்பாரு மனஞ்செயநீராகுஞ்
சுத்தவெளி யறிவோடே தாக்கியேற்றும்
சொல்லுகிறேன் மனம்புத்தி சித்தமென்பார்
தொடர்ந்துநின்ற குருபதத்தைச் சூட்டிக்கேளு
சொல்லுகிறே னறிந்தமட்டும் புருவமையம்சூக்ஷந்
தொட்டேறி யஷ்டாங்க துறையைக்கேளே. (45)

கேளப்பா யேமத்தைச் சொல்வேனானுங்
கெடியான நேமமுட னாசனமுங்கண்டு
வாளப்பா பிராணாயம் பிரத்யாகாரம்
மகத்தான தியானமொடு தாரணையுங்கேளு
தாளப்பா சமாதியிட நிட்டையங்கம்
தனித்தனியே சொல்லுகிறேன் நன்றாய்ப்பாரு
வேளப்பா யேமமென்ற பத்துஞ்சொல்வேன்
வேதாந்தப் பொறியறிந்தோர் பெரியோர்தானே. (46)

பெரியோர்க ளகண்டமென்ற ஆன்மாவைநோக்கிப்
பேரான பரிச்சின்ன மனதுமாகி
அறியோர்கள் ஜாதியென்ற ஆச்சிரமம்விட்டு
ஆசையென்ற விகற்பமெல்லா மடித்துத்தள்ளி
பரியோர்க ளிங்கிசையை நீக்கிப்போட்டுப்
பராபரத்தை நோக்குவதே அங்கிசயமாகும்
சரியோர்க ளாவதுவுஞ் சகலமதத்தாலுக்
தனித்தனியே கண்டிக்கப் படாதென்பாரே. (47)

என்பார்க ளிங்கிசையா யிருக்குமான்மா
எங்கெங்கும் நிறைந்திருந்த சுரூபமூர்த்தி
அன்பார்க ளிதுவல்லோ சத்தியந்தான்மைந்தா
ஆரதிகம் ஆன்மாவார் சரீராதிசுபாவம்
வன்பார்க ளபகரிப்பை விட்டுவிட்டு
மனமுறைத்தா லாரதிக மென்றுபேரு
தன்பார்கள் பிறந்தழியுஞ் சரீராதிசுபாவந்
தானென்ற தற்குலத்தின் லக்ஷணந்தான்பாரே. (48)

பாரப்பா பிரமமது சுபாவமாகப்
பரவியது நிரந்தரமுஞ் சஞ்சரித்தால்மனது
நேரப்பா பிரமசர்ய மிதுதான்கண்டாய்
நிரந்தரமுந் தயவினுட நினைவுகேளு
தாரப்பா சரீரத்தில் வருத்தநீக்கிச்
சகலசனம் நம்மைப்போ லென்றுஎண்ணி
ஆரப்பா சுபாவத்தி லனுபோகஞ்செய்வார்
அவரல்லோ தயவுடைத்தோ ரறிந்துகாணே. (49)

காணப்பா வேதாந்த சாத்திரமோசெம்மை
கரையற்ற சமையமெல்லாம் பொய்யென்றுதள்ளி
ஊணப்பா திடப்பட்டால் ஆக்ஷேபமென்பார்
உஷ்ணமுஞ் சீதளமுஞ் சுகதுக்கத்தாலே
வீணப்பா மானுபி மானம்வந்து
வெறும்வெளிபோற் சொப்பனமா மென்றுதள்ளி
தோணப்பா தாங்காமல் கண்டத்துள்ளே
சொக்குவது சமையமென்று சொல்லலாமே. (50)

சொல்லலாம் வேதாந்தத் துள்ளேமுத்தி
தொடுகுறியாஞ் சாத்திரத்தின் முத்தியில்லை
வெல்லலா மதினாலே சொன்னபொருளெல்லாம்
வேறில்லை நாமதுதா னென்பதல்லோமுத்தி
அல்லலாஞ் சொப்பனம்போ லவத்தையிலேகண்டு
அகிலமென்ற பிரபஞ்சமெல்லா மெடுத்துமூழ்கி
நில்லலா மற்புதமாய் நிற்கவிடமற்று
நிர்மலமாய் நிற்கிறதோர் பூரணந்தானென்னே. (51)

தானென்ற பூரணந்தான் நாமென்றெண்ணிச்
சதாநித்தம் மறவாம லிருந்தானாகில்
வானென்ற கவிதாகாரி யாச்சுதாச்சு
மருவியதோர் சாஸ்திரத்தி னாலேயப்பா
கோனென்ற தன்னிடத்தே வந்ததொன்றுமில்லைக்
கூடிநின்று போனதில்லை யென்றுஎண்ணி
வேனென்ற நிர்க்குணனும் வேறொன்றுமில்லை
வேதாந்தம் நிசமென்றாற் கௌசமாச்சே. (52)

ஆச்சப்பா நேமத்தைச் சொல்லக்கேளு
அறையுறேன் நன்றாகப் பூரணந்தான்
வாச்சப்பா சத்யமென்ன மித்தையென்ன
மருவியதோர் நானென்று நவின்றதாரு
வீச்சப்பா நமக்குவந்த பந்தமேது
வேதாந்த சாஸ்திரத்தால் விளங்கப்பார்த்துக்
கூச்சப்பா திடப்பட்டார் தவசென்றுசொல்வார்
குலாமரிட்ட விடமெல்லாங் குருட்டுநோக்கே. (53)

நோக்கப்பா பிரமமதி லோகத்துள்ளே
நுகர்ந்துநின்ற காமியத்தை நரகம்போலெண்ணி
வாக்கான வெறுப்புவைத்துச் சொப்பனம்போலெண்ணி
மசகமிது வென்றுதள்ளி மவுனத்தேறித்
தாக்கான பொருளல்லோ சச்சிதானந்தந்தம்
தடையறவே தானானாற் சந்தோஷமாச்சு
போக்கான வேதாந்தம் பிர்ம்மசாரம்
புகட்டுகிற குருச்சொல்லும் பூரணமென்றெண்ணே. (54)

எண்ணியதோர் மூன்றையுந்தா னுண்மையென்று
எண்ணியிருக் கிறதாரென் றியம்புவார்கள்
தண்ணியதோர் குருவுரைத்த வுபதேசத்தைத்
தானறிந்து பூரணமாய் முத்தனாகிப்
பண்ணியதோர் பதார்த்தமெல்லாங் குருவுக்கீந்து
பராபரத்தைத் தன்தேகம் போலேயெண்ணி
அண்ணியதோர் சுகமுடனே துக்கமெல்லாம்
ஆருறினுந் தனக்குவந் தாற்போற்காணே. (55)

காணப்பா விப்படியே தீர்த்தாயானல்
கைகடந்த சிவபூசை யென்றுசொல்வார்
வீணப்பா சகலநூ லென்றுதள்ளி
விரைந்துநின்ற விரத்தியெல்லாம் விட்டுவோடி
ஊணப்பா குருப்பிறகே நிழலைப்போலே
உத்தமனே சச்சிதா னந்தனனல்
ஆணப்பா தேவிக்கு முபசரித்துவென்று
அறிகிறதே சிரவணமென் றறிந்துகொள்ளே. (56)

அறிந்திந்த வேதநிலை விட்டுநீயு
மப்பனே வாசனையாம் பிரபஞ்சந்தாண்டி
வறிந்திந்தப் புத்திராதி பாசத்தாலே
மாயம்வந்து மூட்டையிலே லச்சையாக்கிச்
செறிந்துஅதை யடித்தகத்தில் வேதாந்தம்பார்த்துச்
சீராக நிற்கிறதே செம்மையாகும்
நெறிந்துநின்ற வேதாந்தப் பிரமந்தன்னில்
நினைவோடு வருகிறதே யாசைதானே. (57)

ஆசையென்று மதியென்று மதற்குநாமம்
அப்பனே தான்பிரம மென்றுஆசான்
நேசையென்று வுபதேசப் படியேயென்றும்
நேராக வேதாந்தப் பொருளென்றெண்ணி
பூசையென்று மற்றதெல்லாந் தள்ளிவிட்டா
லுத்தமனே சிவமென்று சொல்லுவார்கள்
காசையென்று என்னென்ன காரியங்கள்வந்துங்
கைவிட்ட துக்கம்வந்துங் கலங்கிடாரே. (58)

கலங்காமல் நாம்பிரம மென்றேயெண்ணிக்
கபடற்று நிரந்தரமும் வேதாந்தம்பார்த்து
மலங்காமல் நிற்கிறதே விருதமப்பா
மகத்தான நேயமென்ற பத்துமாச்சு
இலங்காம விருபதையு மனுஷ்டித்தாக்கா
லென்மகனே மனந்திடமா யில்லாவிட்டால்
துலங்காத சுவரில்லாச் சித்ரம்போலாஞ்
சுழியநந்தா னடிப்படைமுன் னேன்றும்வாறே. (59)

வாளுகச் சுகாசனமா யிருந்துகொண்டு
மருவியதோர் மூலத்தில் வங்கென்றுபூரி
கூறுகும் பித்துமாத் திரையையேற்றிக்
குறியோடே சிகாரத்தால் ரேசிரேசி
தாராக விப்படித்தா னங்கென்றுகும்பி
சாதகமா யிதுமூன்றுந் தீர்ந்தபின்பு
ஆளுக அகாரமுத லுகாரங்காட்டி
யப்பனே மவுனத்தாற் கும்பித்தேறே. (60)

கும்பித்து மௌனந்தான் குவிந்தபின்பு
கொள்வதோர் மூலத்தை விட்டுநீயுங்
கம்பித்துக் கண்டத்தே நின்றவூது
காலடங்கி யுறைத்தபின்பு மேல்மூலம்நின்று
சொம்பித்து அறிவோடே மௌனம்பூரி
சுகமாகப் பூரணத்தை யதற்குட்கும்பி
நம்பித்து மனத்தோடே ரேசகத்தைப்பண்ணு
நலமான பிரமமென்று பிராணனுச்சே. (61)

ஆச்சப்பா விதுவல்லோ பிராணுயாமம்
அறிந்தவனுர் சிவயோகி யறியார்மற்றோர்
ஒச்சப்பா பிரபஞ்ச மென்றவாசை
விட்டொன்றை மனதினுள்ளே சங்கியாமல்
வர்ச்சப்பா வந்ததென்ற காரணமாக
மருவியதோர் ஞானமென்ற மார்க்கத்தூர்டிக்
கூச்சப்பா காமியத்தை நரகம்போலெண்ணிக்
கூறுன கர்மமெல்லாம் விடுக்கநன்றே. (62)

நன்ருக வேதாந்த சாஸ்த்ரத்தாலே
நாம்சாக்ஷி யென்றுநித்த முறைத்துநின்று
பன்ருன மற்றதெல்லாம் நாமல்லவென்று
பரவிநின்று உலகமெல்லாம் வித்தையென்று
கன்ருன வுறைப்புவந்து நிரந்தரமுநினைவாய்க்
காரணகா ரியங்களெல்லாந் தவிர்த்துப்பேர்ட்டு
வென்ருன வொருபொருளாய் நின்றுயானு
லுத்தமனே பிரத்தியா காரமாச்சே. (63)

ஆச்சப்பா மாயையொடு மாயவின்ப
மப்பனே சுத்தசைதன் னியமேமூன்று
மோச்சப்பா வாகாயம் போலேயெங்கு
மோடியெங்கு மறைந்திருக்குங் கண்டாலுந்தான்
ஆச்சப்பா அவர்களைத்தான் தீர்த்தமூர்த்தி
வாகனனி தோத்திரமாய்த் தியானம்பண்ண
விச்சப்பா பிரமமென்றே தியானமாச்சு
விளம்புகிறே னைந்துவகைச் சமாதிதானே. (64)

தானென்ற வதிஷ்டான சைதன்யத்தைத்
தானயளித்து நிலவரையில் தீபம்போல
ஆனென்ற அலைவற்றுத் திடமதாக
அப்பனே யகண்டமது தானாய்நின்று
வேனென்ற தோற்றமற் றிருந்தாயானால்
விளங்கியதோர் தத்வலய சமாதியாச்சு
வானென்ற சவிகற்ப சமாதிகேளு
மருவியதோர் தத்வலய சமாதிக்குள்ளே. (65)

உள்ளாக விருக்கையிலே பேசுஞ்சுற்ற
முறவாகக் கேட்டாக்கால் சந்தானுவித்தை
தள்ளாத சவிகற்ப சமாதியென்று
தானுரைப்பார் பெரியோர்கள் கேளுகேளு
விள்ளாத திரிசானு வித்தைமார்க்கம்
விரவியந்தச் சமாதியிலே நிற்கும்போது
தள்ளாத தன்னையனு சந்தானித்துத்
தலமான சந்தானந் திரிசானுமாச்சே. (66)

ஆச்சப்பா இதின்பேரு சவிகற்பமென்பார்
அருளியதோர் நிருவிகற்ப சமாதிகேளு
ஓச்சப்பா தத்வலய சமாதிமுத்தி
யுத்தமனே சந்தானு வித்தங்கேமறந்து
ஆச்சப்பா தூக்கமுற்று மிருகம்போல
ஆச்சரியஞ் சத்தமெல்லாங் கேளாவிட்டால்
கூச்சப்பா சித்தமது சொரூபத்துள்ளே
கொண்டுநின் றாற் பூரணத்தில் நிருவிகற்பமாமே. (67)

ஆமப்பா சமாதிவிட்டுச் சஞ்சரிக்கும்போது
மப்பனே சாத்திரங்கள் பார்க்கும்போதும்
ஓமப்பா காலமென்ற கிரையமில்லை
யுத்தமனே பிரபஞ்ச மில்லையென்று
சோமப்பா விகாரந்தோற் றம்ப்ரபஞ்சஞ்
சொப்பனம்போல் பாசமென்று நியாயத்துற்று
வர்மப்பா தீவிரமாம் பிறவிருத்திநீக்கு
மகத்தான காரணமு மென்றுளண்ணே. (68)

எண்ணியல்லோ மனதுள்ளே படாதேநீக்கி
யேகமாய் நிருவிகற்ப மாகிநின்று
அண்ணியல்லோ பிரபஞ்ச விகற்பந்தள்ளி
யனுபோக நிருவிகற்ப சமாதியாச்சு
ஒண்ணியல்லோ சொரூபத்தி லயிச்சுநின்று
உற்றிருந்த வகண்டவிர்த்தி காலில்தீபந்
தண்ணியல்லோ வுப்புண்டாப் போலேமக்காள்
சாதகமா யுன்னுருவங் கெட்டுப்போச்சே. (69)

போச்சதுவுங் கடிகையொன்று தானாய்நின்றுற்
புகழான பெருமைசொல்ல என்னாற்கூடா
ஆச்சதுவு மவுனமுற்று வாயைமூடி
ஆசையற்று விருந்தாலோ வகண்டவீதி
வாச்சதுவும் பிரபஞ்சங் கண்டதெல்லாம்
வாலையுட னுரைபோலும் மலைபோற்காணும்
கோச்சதுவுஞ் சிலந்தியுட னூலும்போல
கூருமத்தி னங்கம்போற் குறியைக்காணே. (70)

குறியான விண்ணுதித்த மேகம்போலுங்
கோதியதோர் சொப்பனப்ர பஞ்சம்போலும்
நெறியான வகண்டகம் மிடத்தேமைந்தா
நேராக வுண்டாகி விற்றுப்போச்சு
பரியான வெவ்வேறு நாமமாகிப்
பாழுலகு நம்மிடத்தே தோன்றுந்தோன்றும்
மறியாக வழிந்துபோம் நாமேபிர்ம
மற்றொன்று மில்லையென்று மயக்கந்தீரே. (71)

மயக்கமற்று நானொருவ னெனக்குளெல்லா
　　மற்றொன்று மில்லையென்று தீரனாகித்
தியக்கமற்று எந்நேர நிட்டைகொண்டு
　　சேர்ந்துவருஞ் சந்தோஷ துக்கந்தள்ளி
முயக்கமற வருட்டொய்தம் வந்தும்மாயை
　　முன்னின்று விகற்பங்கள் பண்ணினாலும்
அயக்கமற்று மனத்திடமாய் அறிவேதனாய்
　　யாதிகொண்டு மாயையற்றுத் தானாய்நில்லே. (72)

நில்லப்பா சஞ்சார காலத்துள்ளும்
　　நேராகச் சமாதியிலே யிருக்கும்போது
அல்லப்பா தொய்தம்வந்தா லாதரவுபண்ணி
　　யசையாத மலைபோல விருக்கநன்று
சொல்லப்பா கற்பமது வகண்டத்தொய்தஞ்
　　சூட்டிநின்று திடப்படுதல் மெத்தநன்று
வெள்ளப்பா வாசனையை விண்டாயானால்
　　மேவியதோ ராரூட சமாதியாச்சே. (73)

மாயையுத்தி.

ஆச்சப்பா மாயையுத்தி சொல்லவென்று
　　லனேகமுண்டு சூக்ஷமாய்ச் சொல்லக்கேளு
வாச்சப்பா தேசத்திற் பேதாபேதம்
　　மருவியதோர் கிராமத்தில் கிராமபேதம்
ஓச்சப்பா திறங்களிலே கிரகபேதம்
　　ஓகோகோ சனங்களிலே யனேகபேதம்
விச்சப்பா புத்திகளிற் பேதாபேதம்
　　வெகுமோக மாகித்தான் றோன்றுங்காலனை. (74)

ஞானவான்.

காணப்பா வின்னமய மாகிநின்று
　　கலந்துநின்ற பிராணமய கோசமாச்சு
ஊணப்பா விக்யான மயமுமாகி
　　யுத்தமனே மனோமயமாங் கோசமாச்சு
பூணப்பா வானந்த மயமுமாகப்
　　பொங்கிற்று அஞ்சுதிறை போதத்துக்குத்
தோணப்பா திறையஞ்சு மாயைமாயை
　　சொல்லுகிறேன் சூக்ஷத்தைப் பூட்டிப்பாரே.] (75)

பூட்டியதோர் விசிஷ்டனென்றும் விராடனென்றும்
புகழ்பெரிய யேமகற்ப போக்கேதென்றும்
நீட்டியேதோ ரண்டமென்றும் புவனமென்றும்
நேரான பதங்களென்றும் மாயையினலாச்சு
ஆட்டியதோ ராட்டமெல்லா மாயையாட்டு
அறிந்துகொள்ளு முன்மனமே மட்டைமாவை
மூட்டியதோர் மனமும்வந்து வரைக்கேநிற்கு
மூதண்ட மனங்கடக்க முடியாவாறே. (76)

வாரான வுலகத்திற் சுத்தவீரன்
மனதோடே போராடி யருவில்மாழ்வான்
கூரான ஞானியென்று விங்கம்புக்கி
குறியான வம்பலத்தில் சேர்வாரப்பா
தாரான வுலகத்தோர்க் கடுத்தஞானஞ்
சகத்திரமாங் கோடியிலே யொருவர்சொல்வார்
வீரான சிலபேர்கள் சாங்கம்பேசி
விரந்திறந்து விழுந்திறந்து திரிவர்தானே. (77)

தானென்ற பிரமருமோ ரறிவிற்சென்றார்
சாதகமா மாலென்று லறிவின்மையம்
கோனென்ற ருத்திரனே வறிவிலந்தங்
கொள்ளுகின்ற மகேஸ்வரனே ரறிவிற்றேன்றும்
வானென்ற சதாசிவனே மணியைக்காண்பான்
மகத்தான வைவருந்தா னுயிபீடம்
வேனென்ற பஞ்சகர்த்தா மட்டுஞ்சென்றால்
வேதாந்தி யென்றமட்டுஞ் சொல்வார்பாரே. (78)

பாரப்பா சித்தரென்றார் குளிகைபோட்டுப்
பகுத்தறிவார் தன்மனையைப் பகுந்துபோற்றி
நேரப்பா தம்மோடு பூரணத்தினின்று
நேராக வோடம்போல் நீந்தியாடிச்
சேரப்பா திரும்பிவந்து புக்குவார்கள்
செகத்திலுள்ள சித்தருக்கு அடுத்தவாறு
கூரப்பா பூர்ணதிசை நாதந்தீண்டிக்
கொங்கணர்தான் சிலம்பொலியைக் கூடினரே. (79)

கூடினர் மூலகுரு பேரனென்று
  கோடான கோடிசித்த ரோடிப்பார்த்தார்
ஆடினு ராடினு ரேறமாட்டார்
  ஆச்சரியங் கொங்கணர்தா மகண்டசித்தர்
ஓடினு ரோடினு ரனேகங்கோடி
  யோங்கிநின்ற நாதத்தி லொன்றிப்போட்டுத்
தேடினர் தேடினர் குளிகைதன்னைச்
  சித்தருக்குச் சொரூபமணி கிட்டும்வாறே. (80)

வாரான சொரூபமணி யாருவர்க்கம்
  மகத்தான தெக்ஷண மூர்த்திவர்க்கம்
கூரான தொன்றொடுநிஷ் களங்கமாகிக்
  குவிந்துநின்ற பொருளாகிக் கூறெனுகை
தாரான தற்பதமாய் அதுவுமற்றுச்
  சச்சிதா னந்தத்தில் நின்றஆசான்
பேரான பிள்ளைகட்கு மணியுமீந்து
  பெரும்பாதை மகாரமென்று பேசினரே. (81)

பேசியதற் கர்த்தமென்ன வென்றுகேட்டாற்
  பெருவிரல்நீ யாச்சுமேல் விரலேபோத
மாசியது வற்றக்காற் கவிந்தெடுக்குமுன்னே
  மக்களே பாருங்க ளென்றுகாட்டித்
தேசியது மகாரவித்தை சென்றுகூட்டி
  செப்பாதே மகாரவித்தை குளிர்ந்தஞானம்
வாசியதற் கருகாகுங் கண்டுகொள்ளு
  மக்களே சின்மயத்தில் நடுப்பாலாமே. (82)

கடுவென்ன வெட்டவெளி யொன்றுமில்லை
  நானுமில்லை நீயுமில்லை யகண்டவீதி
கடுவென்ன லகுவென்ன மனத்தினலே
  கண்டுகொள்ளு மென்றுசொல்லிக் கரத்தாற்காட்டிச்
சுடுவென்ன தாபமென்ற முனையைமுந்திச்
  சுடுகிற தீயென்ன மௌனத்திதான்
விடுவென்ன விந்திரியப் பாம்பைநீயும்
  விட்டகன்ற அறிவோடே மேவுமேவே. (83)

மேவுகயி லாயபரம் பரையாமாணு
வெகுகோடி ரிஷிகளுக்கு உபதேசித்தார்
மேவுமென்று சித்தரிலே யனேகக்கோடி
மேருவிலே யிருந்தார்க்கு முபதேசித்தார்
மேவுமென்று என்னோடே பதினறுபேர்க்கு
விளங்கியவர் பதம்பிடிக்க வுபதேசித்தார்
மேவுமென்று எழுவருடன் திருமூலர்க்கு
விளம்பினர் மெய்ஞ்ஞானம் விளம்பினரே. (84)

விளம்பியதோர் நாங்கள்கயி லாசவர்க்கம்
மேருவிலே யெடுத்தவுட லெங்களுக்கு
அளம்பினதோர் ஜனகாதி யையரைத்தான்விட்டு
அரைக்ஷணமும் பிரியார்க ளடியைவிட்டுத்
தளம்பினதோர் கொடிக்கல்லோ கொம்புபோலே
சதாநித்தங் காத்திருந்தோ மையாகிட்டக்
கிளம்பினதோர் பந்துபோ லனேகம்பிள்ளை
கெடியிட்டு மாட்டியங்கே கிட்டினரே. (85)

கிட்டினேங் கைலாய பரம்பரையினாலே
கேளுமக்கா ளாச்சர்யங்கொங் கணர்தான்சென்று
கிட்டினே மென்றுசொல்லி யீசானத்தே
கெடியான ரசமுண்டு சட்டைபோக்கிக்
கிட்டினே மீசானந் துதித்தோமென்று
கெடியாகத் தவசிருந்து முத்தனாகிக்
கிட்டினே மென்றுசொல்லித் தக்ஷணாமூர்த்தி
கெடியான பதம்பிடித்துப் பணிந்திட்டாரே. (86)

பணிந்திட்ட கொங்கணரைப் பார்த்துநாயன்
பாருலகிற் பிறந்தோவிப் படித்தானானப்
மணிந்திட்ட சடம்போக்கிக் கைலாயத்தேக
மானதுதான் வெகுகடின மதிகமெத்தக்
கணிந்திட்ட கனிவாலே வீரத்தாலே
கலங்காமற் சமாதியுற்றுக் கயிலாயத்திற்
றணிந்திட்ட புத்திகொண்டு இங்கேவந்தாய்
சாதகமா யொருவரையுங் கண்டிலேனே. (87)

கண்டிலே ஞச்சரியங் குமாரனேபார்
கலந்திடுநற் சென்மமிவர் கைலாயமானூர்
ஒண்டிலே நாலதுக்கு மகத்வமென்ன
வுற்றசிவ விந்துவுன்னிற் படிதானுச்சு
கண்டிலே னிவரைப்போற் சித்தர்காணேன்
காரணமா யிவனுக்குப் போதிப்பேனுன்
பண்டிலேன் கொங்கணரே மயங்கவேண்டாம்
பரம்பரமாய் வந்ததந்த மௌனந்தானே. (88)

மௌனவித்தை மூலருக்கு முன்னேசொன்னேன்
மருவியவர் காலாங்கிக் கதுவேசொன்னூர்
மௌனவித்தை போகருந்தா னுனக்குச்சொன்னூர்
மகத்தான வகண்டாதி யறிந்துகொள்ளு
மௌனவித்தை மயக்கமற்றுத் தெளிந்தபேர்க்கு
மௌனவித்தை யெய்தியிடு மவனேஞானி
மௌனவித்தை யிதுவன்றி வேறென்றில்லை
வாய்திறந்து பேசாதே மகாரமநன்றே. (89)

நன்றான மௌனத்திற் கடிகைசேர
நல்வினையுந் தீவினையும் நாசமாகும்
நன்றான மௌனமென்று நினைக்கமுத்தி
நல்லோர்கள் நினைப்பார்கள் மற்றோர்காணூர்
நன்றான மவுனமல்லோ ரிஷிகள்சித்தர்
நாலுதிக்குஞ் சொரூபத்தைக் கண்டார்கண்டார்
நன்றான மௌனமல்லோ சாத்திரங்கள்
நலமாக அழைப்பதனைக் கண்டிலாரே. (90)

கண்டிலார் மௌனத்தி லனேகசித்தி
காணுமப்பா சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
மண்டிலார் மந்திரங்கள் செபிக்கும்போது
அப்பனே மௌனமென்ற தீக்ஷைகேளு
ஒண்டிலாய் வாய்மூடிப் பேச்சுமற்று
ஒருசேரை சமைத்துண்ணு ஒருபோதப்போ
விண்டிலா தெக்நேரஞ் செபித்தாயானால்
விளங்கியதோ ரேமுலக்ஷ மந்த்ரஞ்சித்தி. (91)

சித்தாகுஞ் சித்தியெட் டெட்டுமோடுந்
திறமாக நின்றவர்க்கு மந்த்ரஞ்சித்தி
பத்தாகும் வேதத்தில் மந்திரத்தைப்
பலபலெனப் பேசியவர் செபிப்பார்கோடி.
கத்தாதும் நாய்போலே கத்தியென்ன
காசுக்கு மாகாது சித்தியில்லை
முத்தான மௌனம்விட்டால் சடம்பாழாச்சு
மோசமிந்த வேதமெல்லாம் பொய்யென்பாரே. (92)

பொய்யென்றே யெண்ணியெண்ணி யுலகங்கெட்டுப்
போச்சதனு லநேகயுக பேதமாச்சு
கையென்று யோகத்தில் மௌனமுட்டக்
கடுஞ்சித்தி யறிவுமட்டுங் கலந்துதாக்கு
தையென்ற நிர்த்தமப்பா ஆறிற்காணுஞ்
சாதகமாய் மேல்மூலந் தாண்டிக்காணும்
மெய்யென்று பிடித்தாக்கா லவனேயோகி
விரைந்திதனை யறியாதார் விருதாமாடே. (93)

விருதன்றோ வுலகத்தி லாசானென்று
வேடமிட்டு மோடியேற்றி
விருதரன்றோ பணம்பறித்துப் பிழைப்பாரையோ
வேதாந்த மொன்றுமில்லைச் சாங்கமென்பார்
விருதன்றோ கெடுத்துவிட்டா ருலகத்தோரை
வேஷமென்னு மயக்காலே மயங்கிப்போனர்
விருதன்றோ சிஷருட பாவமெல்லாம்
விளையாட்டுப் போல்வாங்கி விழுந்திட்டாரே. (94)

விழுந்திட்டா ரென்றறிந்து கொங்கணரேநீர்தான்
வெகுபிள்ளை பெற்றீரா முந்நூறுபிள்ளை
நழுந்திட்ட பிள்ளையுண்டோ திறந்தானுண்டோ
நலமாக வும்மைப்போ லானருண்டோ
அழுந்திட்ட சமாதியுண்டோ தியானமுண்டோ
ஆகாத பிள்ளையுண்டோ சொல்லுஞ்சொல்லுங்
கொழுந்திட்ட தேவரீர் கருணையாலே
கொஞ்சமற்ற பிள்ளைகளைக் கூடினேனே. (95)

கூடாக நல்லபுத்தி சித்தர்வென்றூர்
　　கொள்ளாத வரங்களெலாங் கொண்டுகட்டி
நீடாகத் தெண்டநிட்டு அனுப்பிக்கொண்டு
　　நிமிடத்திற் குகையினுள்ளே நேர்ந்துபோனூர்
ஆடானு லதுவாட்டு என்றேசித்தர்
　　ஆநந்த போகமுண்ட ஆண்மையாண்மை
ஓடானு லதுவோட்டு நிர்க்குணத்தின்வீதி
　　யொருமனதாய் நின்றுபுத்தி யுரைப்புத்தானே. (96)

தானென்ற கொங்கணர்போற் பிள்ளைபெற்றுல்
　　தங்குமடா குட்டென்றூர் கைலமூர்த்தி
வானென்ற சுந்தரா'னந்தன்பேர்க்கு
　　வரவற்ற பூரணமே தாகமென்ன
கானென்ற வெளிகடக்க அறிவோம்நாங்கள்
　　கறையற்ற போதத்தைப் பானஞ்செய்வோம்
கோனென்ற கைலப்பூ ரணமேதேவர்
　　கொள்ளுவதோ ருற்பனமும் லயமுஞ்சொல்லே. (97)

சொல்லுகிறேன் கேளுங்கள் மக்காள்நீங்கள்
　　சுகமாக வாருதியில் மேகம்போலே
அல்லுகிற திவலையைப்போற் பிறப்புண்டாச்சு
　　அதுவோங்கும் விவரமென்ன சொல்வீரையா
பல்லுகிற சந்திரனும் நீரையப்பா
　　பாங்குபரங் கானரவி நன்றுய்ப்பாரு
சொல்லுகிற கெற்பத்தில் விந்துவுன்னி
　　சிந்துதுளி பிரபஞ்ச செனனமாச்சே. (98)

ஆச்சப்பா ஜனனமிந்தப் படியேயாகி
　　யடங்குறது மக்கினியும் ரவிமதியுங்கூடி
வாச்சப்பா சந்திரனிற் கலந்துபோனுல்
　　மாளுகிற விதமிதுதான் குளிர்ந்துபோகும்
நீச்சப்பா சனனமொடு மரணம்ரண்டும்
　　நேராக மனோன்மணியைத் தொட்டுமீளும்
ஓச்சப்பா லக்கமில்லை யேழுதோற்ற
　　முத்தமனே நாலுவகை யோனிகாணே; (99)

காணிந்தப் படியெல்லாங் கண்டுகொண்டு
கலங்காம லிருந்திட்டால் யுகமேகோடி
வானிந்தக் காயமட்டே ஜெகச்சாலமெல்லாம்
மனந்தாண்டி அறிவில்வந்தா லெல்லாம்போச்சு
ஆனிந்தப் படிநீங்கள் சமாதிகொண்டு
அறைவிட்டால் குளிகையிட்டு வோடிப்பாரு
தோனிந்தப் படிசொன்னேன் போதமுன்னைத்
தூக்குசுழல் காற்றரும்பே மவுனமாமே. (100)

மௌனமென்றே யெனையாண்ட தக்ஷணாமூர்த்தி
மலர்பணிந்து ஞானமது நூறஞ்சொன்னேன்
மௌனமென்ற நாதாக்கள் பதத்தைப்போற்றி
வகையோடே நிகண்டாக வாதஞ்சொன்னேன்
மௌனமென்றீர் ஞானம்பொய் யென்றுசொல்லி
வாகான செயமண்டி போட்டேநூற்றில்
மௌனமென்றே சமரசந்தான் மக்காள்மக்காள்
வாகான ஞானமுறை முற்றுங்காணே. (101)

## சட்டமுனி பின்ஞானம். ௱

முற்றிற்று.

மதுரை முனிச்சாலைத்தெரு வைத்தியம் பொன்னுச்சாமிபிள்ளை குமாரர் சீத்தாராமபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய வைத்திய சாஸ்திர ஓலைபேட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம்அச்சிடலானது.

உ
பரமபதி துணை.

தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திரட்டு.

முன் பலர் அச்சிட்டிருக்கும் வைத்திய ஞான சாத்திரங்களில் அநேக இடங்களில் ஒவ்வொரு விஷயங்களை மறைப்பாகவும் மனதிற்கு நன்கு புலப்படாமலும் கூறியிருப்பதைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளவேண்டி மேற்கூறிய வைத்திய வாத யோக ஞானசாஸ்திரத்திரட்டு இதுவரையிலும் அச்சிட்டு வெளிவராத அரிய சாஸ்திரங்களாகவும், ஒவ்வொரு விஷயங்களையும் வெகு தெளிவாய்த் தெரிந்துகொள்வதற்கேதுவான மறைப்பில்லாத சாஸ்திரங்களாகவும் அநேக தேசங்களிற் சென்று ஓலையேட்டுச் சுவடிகள் கிடைக்கப் பெற்று, அநேக மகான்களைக்கொண்டு சீர்திருத்தஞ்செய்து திக்குக் கடிதத்தில் சுத்தப் பிரதியாகப் பிழைபறப் பரிசோதித்து 6பாகங்களாக அச்சிட்டிருக்கின்றன.

ஷை ஆறு பாகங்களையும் வாங்கி வாசித் துணரின் ஒவ்வொரு விஷயங்களையும் எளிதிற் றெரிந்துகொள்வதற் கேதுவாகும். ஆதலா லொவ்வொருவரும் இந்த ஆறு பாகங்களையும் வாங்கி வாசித்து ஞான சித்திபெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

பாகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.

வைத்திய வாத யோக ஞான சாஸ்திரப்புஸ்தகங்களும் இன்னும் வேண்டும் புஸ்தகங்களும அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் [illegible]. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

சாஸ்திரங்களின் விவரந் தெரிய விரும்புவோர் அரையணா லேபிள் அனுப்பி அடியிற்கண்ட விலாசதாரிடம் ஞானசாஸ்திரக்காட்லாக் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

☞ இ. ராம. குருசாமிக்கோனர்,

புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதிதுணை.

# வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரங்களின்

# விளம்பரம்.

அடியிற்கண்ட புஸ்தகங்களையெல்லாம் ஓலையேட்டுச் சுவடிகளை வைத்துப் பரிசோதித்து சுத்தப்பிரதியாய்த் நிக்குக் கடிதத்தில் அச்சிட்டிருக்கின்றன. வாங்கி வாசித்துணருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராமதேவர்வைத்யம் 1000 | 0 | 12 | 0 |
| ஷைகருக்கடை 500 | 0 | 10 | 0 |
| ஷையார் சிவயோகம் 200 | 0 | 5 | 0 |
| பிர்மமுனிவைத்தியம் 380 | 0 | 7 | 0 |
| கொங்கணர் கடைக்காண்டம் 500 | 0 | 8 | 0 |
| கருவூரார் பலதிரட்டு 300 | 0 | 6 | 0 |
| சட்டைமுனிவர்ஞானம்200 | 0 | 5 | 0 |
| போகர் வைத்தியம் 700 | 0 | 10 | 0 |
| போகர் நிகண்டு 1200 | 1 | 0 | 0 |
| ஷைபலதிரட்டுவைத்யம்710 | 0 | 10 | 0 |
| ஷைவைத்தியம் 1000 | 0 | 12 | 0 |
| புலிப்பாணி வைத்தியம்500 | 0 | 8 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம்500 | 0 | 8 | 0 |
| சுப்பிரமணியர் 200 | 0 | 4 | 0 |
| நந்தி கருக்கடை 300 | 0 | 5 | 0 |
| நந்தி நிகண்டு 300 | 0 | 5 | 0 |
| உரோமரிஷிவைத்தியம் 500 | 0 | 8 | 0 |
| உரோமரிஷி வகாரம் 500 | 0 | 10 | 0 |
| திருமூலர் வைத்தியம் 600 | 0 | 8 | 0 |
| தேரையர் வைத்தியம் 1001 | 0 | 12 | 0 |
| மச்சமுனிசரக்குவைப்பு800 | 0 | 8 | 0 |
| மச்சமுனி வகாரம் 800 | 0 | 12 | 0 |
| ஷைபெருநூல் 800 | 0 | 12 | 0 |
| தெட்சணாமூர்த்திஜாலம்500 | 0 | 8 | 0 |
| யூகிமுனிவைத்தியம் 800 | 0 | 8 | 0 |
| வசிஷ்டர் வைத்தியம் 205-ம் இன்னும்சிலசாஸ்திரங்களும் | 1 | 0 | 0 |
| சுந்தரானந்தர் வைத்தியமும் இன்னும்சிலசாஸ்திரங்களும் | 1 | 0 | 0 |
| கடைப்பிள்ளை வைத்தியமும் இன்னும்சிலசாஸ்திரங்களும் | 1 | 0 | 0 |
| காலாங்கிநாதர்வைத்தியமும் இன்னும்சிலசாஸ்திரங்களும் | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் செந்தூரம் 300 | 0 | 7 | 0 |
| ஷைவைத்தியபூரணம் 205 | 0 | 5 | 0 |
| ஷைபூரண சூஸ்திரம் 216 | 0 | 6 | 0 |
| ஷைபரிபூரணம் 400 | 0 | 7 | 0 |
| ஷைவைத்திய ரத்தினச் சுருக்கம் 365 | 0 | 6 | 0 |
| தன்வந்திரி கருக்கடை 300 | 0 | 4 | 0 |
| தன்வந்திரி நிகண்டு 300 | 0 | 6 | 0 |
| ஷை தயிலம் 500 | 0 | 6 | 0 |
| ஷைகலைக்கியானம் 500 | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் பூசாவிதி 200 | 0 | 4 | 0 |
| ஷைபஞ்சகாவியநிகண்டு800 | 0 | 12 | 0 |
| ஷைபரிபூரணம் 1200 | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் முப்பூ 600 | 0 | 10 | 0 |
| ஷைகர்மசூஸ்திரம் 350 | 0 | 7 | 0 |
| ஷைபச்சிலை நிகண்டு | 1 | 0 | 0 |
| பிர்மமுனி வைத்தியம் 750 | 0 | 10 | 0 |
| யாகோபு வைத்தியம் 740 | 0 | 12 | 0 |
| ஷைசுண்ணம் 300 | 0 | 6 | 0 |
| ஷை செந்தூரம் 300 | 0 | 6 | 0 |
| யூகிமுனி வகாரம் 1000 | 1 | 0 | [illegible] |
| அகஸ்தியர்கௌமதிநூல்420 | 0 | 8 | [illegible] |
| ,,ஞானசவுமியசாகரம்1200 | 1 | [illegible] | [illegible] |
| ஷைதத்துவம் 300 | 0 | 6 | [illegible] |
| பச்சிலை மருந்துகளின் பரிபாஷை மறைப்பு, கருப்பொருள், மூலிகைமுதலியவைகளின்வெளிப்படை 9 அகராதிகள் சேர்த்த பெரிய ☞ அகராதி | 2 | 8 | 0 |

☞ இ. ராம. குருசாமிக்கோன்,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.